உ

# அருள் ஒளி





புத்தாண்டு வாழ்த்துக்கள்



இதழ் 151

பங்குனி 2021

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவாசல் கோபுர அடிக்கல் நாட்டு விழா வைபவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. ப. சேயோன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

சித்திரை – 2021 மாதமலர்

T.P : 021 321 3151, 021 224 1909

e.mail: thurkaiammantemple@gmil.com
face book: @tellidurga

பதிவு இல: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

## தொல்லியல் ஆய்வு என்ற பெயரில் எமது சைவத் திருக்கோயில்களை தொந்தரவு செய்யாதீர்

சமீபத்தில் தொல்லியல் ஆய்வு என்ற பெயரில் வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் தொன்மை வாய்ந்த பல சைவக் கோவில்களில் தொல்லியல் திணைக்களம் சார்ந்தவர்கள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது அறிந்து சைவத் தமிழர்கள் மிகுந்த கவலையடைந்துள்ளனர். மிக நீண்ட வரலாறு கொண்ட இலங்கையில் ஆதிச் சமயம் சைவம் என்பதை பல ஆய்வாளர்கள் அன்று ஒப்புக் கொண்டனர். இரண்டாயிரம் ஆண்டு பழைமை வாய்ந்த இதிகாச புராணமாகிய இராமாயணம் இலங்காபுரி எங்கும் சிவலிங்க மயமாக விளங்கிய சிறப்பை எடுத்துரைத்துள்ளது. குபேரச் சக்கரவர்த்தி, இலங்கை வேந்தன் இராவணன் மிகச் செல்வத்தோடு சைவப் பூமியாகக் காத்ததை அனைவரும் ஒப்பு கொள்வர். இந் நிலையில் இன்று சைவக் கோயில்கள் அமைந்த இடங்களில் பௌத்த தடயங்கள் உள்ளன எனக் கூறிக்கொண்டு அரச திணைக்களம் செய்யும் செயல் வேதனை தருகிறது. கந்தரோடை முதல் உருத்திரபுரம், மண்ணித்தலை, நிலாவரை என சைவப் பாரம்பரியம் மிக்க புனித இடங்களில் தொல்லியல் திணைக்கள விளம்பர பலகை நாட்டப்பட்டு ஆய்வு தொடங்குவது அச்சம் தரும் செய்தியாகும். வரலாற்றுத்துறைப் பேராசிரியர். சு. பத்மநாதன் அவர்கள் ஆராய்ச்சி என்பது உண்மை தன்மையுடையதாகவும் நிரூபிக்கத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும். எனக் குறிப்பிட்டுள்ளார். ஒரு பக்கச் சார்பாக இம்மண்ணின் வரலாற்றை மாற்றி அமைப்பதற்கு திட்டமிடுகிறார்கள். தர்மம் என்றொரு பொருள் உளது. என்றோ ஒரு நாள் உண்மை நிலைக்கும் திட்டமிட்டு தெய்வ சந்நிதானங்களைச் சூறையாடுவது நாட்டுக்குக் கூடாது. யார்க்கெடுத்துரைப்போம்..? இறைவன் தான் இவ்விடர் களைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் வருடப்பிறப்பு

**கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி.**
தெல்லிப்பழை,

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என்பது எமது தினாந்தரப் பிரார்த்தனை. "வையகம் எல்லாம் துயர் தீர்கவே" என்பது நாம் படிக்கும் திருமுறை. "பெருகலாம் தவம், பேதமை தீரலாம், திருகலாகிய சிந்தை திருத்தலாம்" என்பது அப்பர் பெருமான் வாக்கு. இன்றைய தினத்தில் எமதுள்ளத்தில் இருத்த வேண்டிய வாசகங்கள் இவை. எங்கும் சிவமயம், எல்லாம் சிவமயம், எதிலும் சிவமயம் என்று எண்ணியெண்ணி இறும்பூது எய்த வேண்டுமானால் ஒவ்வொரு அடியும் திருவருளை நோக்கி வைக்க வேண்டும். என்பதற்குப் பயின்று கொள்ள வேண்டும். காலத்தை அளந்து அளந்து வாழுகிறோம். அளவுக்கும் எமக்கும் சம்பந்தமில்லை என்றாலும் அது தானாகவே இயற்கை நியதிப்படி அமைந்து எம்மை விழிப்படையச் செய்கிறது. கடந்த ஆண்டு நாம் ஆற்றிய தரமான பாதைக்கு வழிநடத்தத் துண்டுகிறது. ஒழுக்கமும், தெய்வ நம்பிக்கையும் இணைந்து இடைவிடாது முயற்சி செய்து வாழ்வை வளமாக்க உறுதிபூண வேண்டும். தெய்வ நம்பிக்கையுடையவர்களே நியாயத்துக்குக் கட்டுப்படுவார்கள். பிறர் துன்பங்கண்டு வருந்துவதோடு அதனை போக்கி விடவும் முன்வருவார்கள். நமது சமயப் பெரியார்கள் ஆத்மீகத்துறையில் எவ்வளவு உயர்ந்து நின்றார்களோ அதே அளவு மக்கள் தொண்டும் செய்திருக்கிறார்கள். இதனால் இறைவனுடைய அன்புக்குப் பாத்திரரானார்கள். இந்த நிலை கைவருமானால் மற்றவர்களால் ஏற்படும் துன்பங்கள் எம்மை நலிவடையச் செய்யமாட்டா. கோளறு பதிகம் இதனை அழகாகக் காட்டுகிறது.

**"கோளரி யுழுவையோடு கொலையானை கேளல் கொடுநாக மேடு கரடி**
**ஆளரி நல்ல நல்ல அவைநல்ல நல்ல அடியார வர்க்கு மிகவே"**

என்பது ஞானவாக்கு. இவை எமது இல்லங்கள் தோறும் இடம்பெற வேண்டும். புதுவருடப்பிறப்பு என்றால் இறைவழிபாட்டுடன் பொங்கல் செய்து தாமுண்டு பிறருக்கு வழங்கலும், பெரியவர்கள் கையினால் கைவிஷேசப் பணம் பெற்று மகிழ்வதும், விருந்து கொடுத்தலும் சுப நேரம் பார்த்துப் புதுக்கருமங்களை ஆரம்பிதப்பதும் ஆலய வழிபாட்டைத் தவறாது செய்தலும் எமது பண்டுதொட்ட மரபாகும். இவற்றை வெறுஞ் சடங்காக மட்டும் மேற்கொள்ளாமல் உள்ளத்திலும் புதுமையுணர்வு ஓங்கி "நானும் வாழ்ந்து மற்றவர்களை வாழவைப்பேன்" என்ற திடசங்கற்பத்தை எடுத்து கொள்வது மேலானது. சிந்தனையிலும் செயலிலும் புதுமை காணவேண்டும்.

"அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணி அரும்பசி எவர்க்கு மாற்றி, மனத்துள்ளே பேதா பேதம் பொய் வஞ்சகம் களவு சூது சினத்தையும் தவிர்ப்பாராகில் செய்தவம் வேறொன்றுண்டோ" என்றார் ஒரு பெரியார். சமய வாழ்வு என்பது தனக்குத்தானே நற்சான்று பகர்வதிலே தான் வெற்றி காண்கின்றது. கல்வி என்பதும் நீதி, சத்தியம், அறம் என்பவற்றின் சார்பிலே வளரவேண்டும். இன்று கற்றவர்கள் மத்தியிலே பல ஊழல்களைக் காணுகிறோம். கல்லாத பேர்களே நல்லவர்கள் என்று சொல்ல நேரிடுகிறது. ஆகவே புத்தாண்டை முன்னிட்டு எமது பணிகளை நல்லபடி வகுத்து தெய்வத்தை முன்வைத்து திருவருளைத் துணைகொண்டு அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் அகத்திலே அன்புங் கொண்டு வாழ வழிகாண்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை வழிபாடு

திருமுருக கிருபானந்த வாரியார்

எங்கும் நிறைந்தவன் இறைவன். இறை என்ற சொல் "இறு" என்ற பகுதி அடியாகப் பிறந்தது. சரம் அசரம் என்ற எல்லாப் பொருள்களிலும் தங்கியிருப்பவன் இறைவன்.

"பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற
நிறைகின்ற பரிபூரணானந்தமே"
"அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்தபூர்த்தி யாகி அருளொடு நிறைந்தது"

உடம்பிலே உயிரும், உயிரிலே இறையும் தங்கியிருக்கின்றன. உதை பந்து- பந்துக்குள் பிளாடர் அதற்குள் காற்று என்பது போல எல்லாப் பொருள்களையும் எல்லா உயிர்களையும் இயக்குகின்றதனால் பரம் பொருள் இயவுள் எனப் பேர் பெற்றார். பெயரும் பெயர் இயவுள் என்பர் நக்கீரர். எல்லாவற்றையும் கடவுவதனால் கடவுள் எனவும் பெயர் பெற்றது.

உள்ளொடு புறங்கீழ் மேலாய்
உயிர்தொறும் ஒளித்து நின்ற கள்வன்
- என்பார் பரஞ்சோதி முனிவர்

அண்டமும் அளவிலாத உயிர்களும்
ஆகமாகக் கொண்டவன்
- என்பது இவரது திருவாக்கு.

இன்னணம் இறைவன் எங்கும் இருப்பினும் ஞானிகள் திருவுள்ளத்திலும் திருக்கோயில்களிலும் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்றான். ஏனைய இடங்களில் இறைவன் மறைந்திருக்கின்றான்.

"ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே"
- மாணிக்கவாசகர்

பாலில் நெய் மறைந்திருப்பதுபோல, பிற இடங்களில் இறைவன் நிறைந்து மறைந்திருக்கின்றான். கடைந்த தயிரில் வெண்ணெய் திரண்டு உருண்டு வெளிப்பட்டிருப்பதுபோல, ஞானிகள் உள்ளத்திலும், திருக்கோயிலிலும் இறைவன் விளங்கிக் காட்சியளிக்கின்றான்.

பரந்து விரிந்து இருக்கின்ற கதிரவனுடைய வெப்பத்தை ஒன்றுபடுத்தித் தன்கீழே சூர்ய காந்தக் கண்ணாடி பாய்ச்சுகின்றது. பிற இடங்களில் இறைவனை வழிபடுவது, வெய்யிலில் வேட்டியை வைப்பது போலாகும். திருக்கோயிலில் இறைவனை வழிபடுவது, சூரியகந்தக் கண்ணாடியின் கீழே வைப்பது போலாகும். ஆதலால், திருக்கோயில் வழிபாடு இன்றியமையாததாகும்.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே" என்பது சிவஞான போதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமேனிகள்

திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும் நால்வர், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப் பெற்ற காரணத்தால் அவை மேன்மை பெற்று, வழிபடுவோருடைய வல்வினைகளை அகற்றி, வேண்டிய வரங்களை வழங்கி அருள்புரிகின்றன.

பசுவின் உடல் முழுவதும் பால் பரவியிருப்பினும் மடியின் மூலமாக அதனைப் பெறுவதுபோல், எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளைத் திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் மூலமாக நாம் பெறுதல் வேண்டும்.

ஒரு பறவை இரு சிறகுகளைக் கொண்டு பறப்பதுபோல், இறை வழிபாட்டிற்குப் பூவும் நீரும் வேண்டப்படுகின்றன.

**"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அதுகண்டு அருள்புரிய நிற்கும்"** என்பது திருமந்திரம்.

எங்கும் நிறைந்த இறைவனை, எங்கும் எளிதாகக் கிடைக்கக்கூடிய பூவினாலும் நாம் வழிபட வேண்டும். வழிபாட்டிற்கு அன்பும், ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை.

**'அன்புடன் ஆசார பூசை செய்து**
**உய்ந்திட வீணாள் படாது அருள்புரிவாயே"**
என்று அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

## வடவேதி திருக்கோயில்

கோயில் ஐந்து பிரகாரங்களோடு கூடியது. இந்த உடம்பே இறைவன் இருக்கின்ற திருக்கோயில். இந்த உடம்பு அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம் என்ற பஞ்ச கோசங்களையுடையது. உடம்பில் 32 கட்டுக்களோடு கூடிய முதுகந்தண்டே, திருக்கோயில் கொடிமரமாகக் காட்சியளிக்கின்றது. கொடிமரத்தில் கொடி ஏறியவுடன் இறைவன் வெளியே வந்து காட்சியளிக்கின்றான். அதுபோல் முதுகொலும்பாகிய வீணா தண்டத்தில் வளைந்து செல்லுகின்ற சுழுமுனை என்ற வெள்ளை நரம்பின் வழியாகப் பிராணவாயு ஆறாதாரங்களையுங் கடந்து, பிரமந்திரத்தைத் தாண்டி சகஸ்ரார வெளியிலே சென்றவுடன் சிவசோதி காணப்படும்.

திருக்கோயிலில் விளங்கும் பத்திர இலிங்கமாகிய பலிபீடம் பாசத்தையும், நந்திதேவர் பசுவையும், சிவலிங்கம் பதியையும் குறிப்பிடுகின்றன. நமது சரீரத்தில் உள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும் கோயிலில் உள்ள யாக மண்டபம், அலங்கார மண்டபம், கல்யாண மண்டபம், நிருத்த மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம் என்ற மண்டபங்கள் தெரிவிக்கின்றன. எனவே, திருக்கோயில் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை வழிபட்டு அங்கே கண்ட பரம்பொருளை நம் உடம்புக்குள்ளேயும் கண்டு மனோலயம் பெற வேண்டும்.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே**

- திருமந்திரம்

கட்டையில் கனல் மறைந்திருக்கின்றது. "விறகிற் றீயினன்" என்கின்றார் அப்பர் பெருமான். கட்டையைக் கடைந்தவுடன், அதில் மறைந்த கனல் வெளிப்பட்டுக் கட்டை கனலாகக் காட்சியளிப்பது போல், உயிரில் ஒளிந்திருக்கின்ற இறைவனை ஞானத்தால் கடைவோமாயின், சிவம் வெளிப்பட்டுச் சீவனைச் சிவமாக்கிக் கொள்ளுகிறது.

எண்ணில் காலமாக எண்ணில்லாத உடம்பெடுத்து வருகின்ற நாம், இறைவனை மெய்யன்புடன் உள்ளம் குழைந்து உருகி மலரிட்டு அருச்சனை செய்து வழிபட்டால் பிறவி நோய்தீரும்.

**கன்றெடுத்து விளவெறிந்து**
**காலெடுத்து மழைக்குடைந்த காலிகாக்கக்**
**குன்றெடுத்து மால்விடையின்**
**கொடியெடுத்து வடிவெடுத்துக் கூறொணாத**
**மன்றெடுத்த சேவடியின் மலரெடுத்துச்**
**சாத்தியன்பின் வழிபட் டோர்கள்**
**இன்றெடுத்த வுடற்பிறவி யினியெடா**
**வண்ணமெண்ணம் எய்து வாரே.**

- சிவரகசியம்

இறைவன் தந்த உடம்பினால் அவனை வழிபடுவது கடமையாகும். அன்றேல் கடமையை மறந்த மடமையாகும். நீரில் நீராடினால் வெப்பம் தணிவது போல் அருட்கடலாயிருக்கிற ஆண்டவனை வழிபட்டால் நம்முடைய பிறவி வெப்பம் தணிகின்றது.

**"ஆர்த்த பிறவித்துயர்கெட நாம் ஆர்த்தாடும்**
**தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்கூத்தன்**

என்று மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவையில் அருளிச் செய்கின்றார். உடம்பின் பயன் இறைவனை வணங்குவதாகும். அறிவின் பயன் இறைவனை அறிவதாகும். கல்வியின் பயன் கடவுளை தொழுதலாகும்.

**கற்றதனாலாய பயன் என்கொல்? வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்**

- திருவள்ளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சென்றது காலம் சிதைந்த(து) இளமைநலம்**
**நின்றதுசா வென்று நினைந்துருகி - மன்றில்**
**நடிக்கின்ற பால்வண்ணர் நாமமெண் ணாமாந்தர்**
**படிக்கின்ற நூல்எல்லாம் பாழ்..!**

- அதிவீரராம பாண்டியர்

இறைவனுடைய திருவடியில் அன்பில்லாதவர் கல்வியின் பெருக்காலும், குலத்தின் முறுக்காலும் நன்மையடைய மாட்டார்.

**கற்றதனாற் றொல்வினைக் கட்டறுமோ நல்லகுலம்**
**பெற்றதனாற் போமோ பிறவிநோய - உற்றகடல்**
**நஞ்சுகந்து கொள்ளருணை நாதனடித் தாமரையை**
**நெஞ்சுகந்து கொள்ளா நெறி**

- அருணகிரியந்தாதி

அதனால் மனிதப் பிறப்புக்கு இறை வழிபாடு இன்றியமையாதது என வுணர்க ஒரு மாவட்டத்திற்கும் மற்றொரு மாவட்டத்திற்கும் அரசங்கத்தார் ஓர் எல்லைக் கல் அமைத்திருப்பது போல், விலங்குகட்கும் மனிதனுக்கும் இடையில் இட்ட எல்லைக்கல் இறைவழிபாடாகும். இறைவழிபாடு செய்கின்ற விலங்கு தேவன் எனவும் உணர்க.

## வழிபடும் முறை

கோயிலில் வழிபடுவோர் நீராடி, தூய ஆடை அணிந்து, சமயச் சின்னங்கள் தரித்து, அன்புடனும் ஆசாரமுடனும் கோயிலுக்குச் செல்லுதல் வேண்டும். கொடிமரத்திற்கு வெளியே விழுந்து வணங்குதல் வேண்டும் உள் பிராகாரங்களில் விழுந்து வணங்குதல் குற்றம்.

விநாயகரை ஒரு முறையும் சிவமூர்த்தியை மூன்று முறையும் அம்பிகையை நான்கு முறையும் வலம் வருதல் வேண்டும். கோயிலில் ஒருமைப்பட்ட மனதுடன் வழிபாடு செய்ய வேண்டும். கோயிலில் வழிபடுவோர் வீண்வார்த்தைகள் பேசுவதும் எச்சில் துப்புதல் பிற தீமைகள் செய்தலுங் கூடா. அர்ச்சகர் தரும் விபூதி பிரசாதங்களைப் பயபக்தியுடன் இரு கரங்களாலும் ஏந்திப் பெறுதல் வேண்டும். பெற்ற பிரசாதத்தைக் கீழே சிந்துதலும் ஒரு புறத்தில் எறிவதும் பெரும் பாவமாகும். சண்டேசுவரர் மீது நூல் இடுவதும் சிவ லிங்கத்திற்கும் நந்திதேவருக்கும் இடையே போவதும் மிக்க குற்றமாகும்.

கோயிலில் பிரசாதங்கள் உண்டு. கோயில் தூண்களில் துடைப்பது அனுசிதமாகும். கோயிலில் படுத்து உறங்குவோர் மறு பிறப்பில் மலைப் பாம்பாகப் பிறப்பார்கள். வழிபாடு முடிந்த பின் கொடி மரத்தின் அருகில் இருந்து வடதிசை நோக்கி அமர்ந்து மூலமந்திரம் ஜெபிக்க வேண்டும். நன்கு இனிமையாகத் தோத்திரப் பாடல்களை அதிகம் சப்தம் போடாமல் இனிய குரலில் ஓதித் துதிக்க வேண்டும் கோயில் விளக்குகளில் எண்ணெய் இடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கிட்டார் பேறுசொல்லில்
மெய்ந்நெறி ஞானமாகும்

- அப்பர்

ஆத்மஜோதியில் அருஞ்ஜோதி சூழசிவ ஜோதி விளங்குகிறது.

ஆத்மஜோதி - வட்டமாகிய கல்
அரும்ஜோதி - சூழ்ந்திருக்கின்ற ஆவுடையார்
சிவஜோதி - மேல் நோக்கிய இலிங்கம்
இது தான் ஜோதியின் உண்மை.

**'ஜோதியுள் ஜோதியுள் ஜோதி'**
என்பார், இராமலிங்கம் அடிகளார்.

## வீட்டு வழிபாடு

நாள்தோறும் குடும்பத்தில் உள்ளோர் அனைவரும் ஒன்று கூடிக் காலை அல்லது மாலையில் வழிபடவேண்டும். வீட்டுத் தலைவன் ஒரு பாடலைச் சொல்ல ஏனையோர் அதனை வழிமொழிந்து சொல்லி இறைவனைக் காதலுடன் வழிபாடு செய்யவேண்டும். இதனால் குடும்பத்தில் ஒற்றுமை உண்டாவதுடன் அந்த வீட்டில் தெய்வ கடாட்சமும் திருமகள் விலாசமும் உண்டாகும்.

## கூட்டு வழிபாடு

ஒரு தனி இழையை எளிதில் அறுத்துவிடலாம். பல இழைகள் ஒன்று பட்டுத்தரித்தகயிறு (வடம்) தேரை இழுத்துவிடும். அதுபோல பல அன்பர்கள் வாரத்திற்குகொரு நாள்கோயிலில் ஒன்றுபட்டுக் கூட்டு வழிபாடு செய்தல் திருவருளை ஈர்த்து விடலாம்.

இறை வழிபாடு செய்து மார்க்கண்டேயர் மவுலியை வென்ற வரலாறு உலகம் அறிந்த ஒன்று.

முஸ்லீம் அன்பர்கள் தினம் ஒன்றுக்கு ஐந்து வேளை தவறாமல் தொழுவதும் கிறிஸ்தவ அன்பர்கள் ஞாயிறு தோறும் ஆண், பெண் அடங்கலும் தங்கள் தேவாலயத்திற்குச் சென்று நியதியாகத் தொழுவதும்போல் இந்துக்களாகிய நாமும் குறிப்பிட்ட நாட்களில் ஆங்காங்குள்ள ஆலயங்களில் நியதியாக வழிபடுவது மிக மிக அவசியமாகும். அண்ணல் காந்தியடிகள் இறுதியாகப் பிராத்தனைக் கூட்டம் நாள்தோறும் நடத்தி முடிவில் பிரார்த்தனைக் கூட்டத்திலேயே ஆத்மசாந்தியடைந்தார். ஆதலால் அன்பர்கள் காதலாகிக்க கசிந்து கடவுளை வழிபட்டு இகபரநலன்களை எளிதில் பெறுதல் வேண்டும். இறை வழிபாடு செய்து பிறவிப் பிணியை ஒழித்து பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவார்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில்

ஸ்தபதி. வை. கணபதி,
(முதல்வர், மாமல்லபுரம் சிற்பக் கல்லூரி).

வானுயர்ந்த கோபுரங்களும், நீண்ட மதிற்சுவர்களும், அகண்ட பிராகாரங்களும், நீர் நிறைந்த தடாகங்களும், வியத்தகு விமானங்களும், அணிதிகழ் மண்டபங்களும், சிந்தனை யுந்துஞ் சிற்பங்களும், பத்தியை வளர்க்கும் படிமங்களும், சிறந்த ஓர் ஆலயத்தின் உறுப்புக்களாகும். இவ்வங்கங்களைக் கொண்ட ஓர் ஆலயமானது சாதாரண கண்கொண்டு பார்ப்போருக்குச் சிறியனவும், பெரியனவுமான கட்டிடங்களின் கூட்டமாகவும், ஒன்றோடொன்று தொடர்பற்றதாகவும் தோற்றமளிப்பது இயற்கையே ஆனால் உண்மை அஃதன்று.

நம் தென்னக ஆலயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காவியப் படைப்பாகும். ஒரு சிறந்த காவிய நிர்மாண இலக்கணத்தைத் தழுவியே ஆலய நிர்மாண இலக்கணமும் இயற்றப் பெற்றிருக்கிறது. ஆலயங்களைக் "கலைப்படைப்புக்கள்! அழியாத் தன்மை வாய்ந்தவை!" என்று அறிஞர் பலர் கூறுவது இவ்வடிப்படையிலே தான் என்பதைச் சிந்தித்தறியலாம்.

சிறந்த ஒரு காவியத்திற்கு நல்லதொரு கருத்து உயிராக விளங்கும், அக்கருத்து ஒரு கற்பனையாக வடிவம் பெறும், நவரசங்கள் இடம் பெறும், உயிராக விளங்கும் கருத்துக்கு அழைத்துச் செல்லும் சிறு சிறு நிகழ்ச்சிகளும் அமையும், பலப்பல பாத்திரங்கள் நிற்கும், இவற்றையெல்லாம் ஒரு சேரப் பார்க்கும் போது ஏகம் என்ற உணர்ச்சி தோன்றும்.

ஆலயம் என்ற அமைப்பினை நமது பண்டைச் சிற்பிகள் பல சிறந்த தத்துவக் கருத்திற்கேற்றவாறு உருவாக்கியுள்ளார்கள். ஆகம நூல்களும், சிற்ப நூல்களும் பலப்பலக் கருத்துக்களை வழங்கியுள்ளன. புதுப்புதுக் கருத்துக்களும் அவற்றையொட்டி உருவாகி இருக்கின்றன.

நமது கோயில் அமைப்பைப் பிரபஞ்சத்தின் மாதிரி உருவம் என்று ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. பஞ்ச பிராகாரங்களைப் பஞ்ச பூதங்களென்றும் அதற்குள் நுண்ணிய பொருளாக இறைவன் உள்ளான் என்றும் பெரியோர் கூறுவர். "விசுவகர்மீயம்" என்ற பண்டைச் சிற்ப நூல் ஒன்றில் பஞ்சப் பிராகாரங்களுக்கு நடுவே அமைக்கப்படும் விமானத்தைப் பற்றி அழகிய கருத்தொன்று காணப்படுகிறது. கருவறை என்று சொல்லப்படும் விமானத்தைப் பெண் வடிவம் என்றும், அதற்குள்ளிருக்கும் மூர்த்தியை உதரத்தில் உள்ள கெர்ப்பம் என்றும் வருணிக்கிறது. உதரத்தில் கெர்ப்பமாக மூர்த்தி அமைக்கப் பெற்றிருப்பதாலேயே இக் கட்டிடத்தைக் கெர்ப்பக் கிருகம் என்றும் கருவறை என்றும் அழைக்கின்றோம். இக்கருத்தினை வலியுறுத்தும் பொருட்டே மூல மூர்த்தி வீற்றிருந்தருளும் கட்டிடத்தைக் குக்குடாண்ட (கோழிமுட்டை) வடிவமாகவும் அமைக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சிற்ப நூல்கள் கூறுகின்றன. இத்தகைய குக்குடாண்ட வடிவத்தில் ஒரு கோயில் காஞ்சிபுரத்தில் நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது. இக்கோவில் காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோவிலின் தெற்கு வீதியில் **"ஜ்வர ஹரேஸ்வரம்"** என்ற பெயரில் அமைக்கப்பெற்றிருக்கிறது. பொதுவாகப் பழம்பெரும் கோவில்களில் மூலஸ்தான விமானத்தையும், ஏனைய கட்டிடங்களையும், கோபுரங்களையும் நோக்கினால் மூலஸ்தான விமானம் சிறிதாகவும், ஏகதளத்தை உடையதாகவும், தாழ்ந்தும் அமைக்கப்பட்டிருக்கும். பிராகாரங்களும், கோபுரங்களும், மதில்களும் அடுக்கடுக்காய் பரந்தும் விரிந்தும், உயர்ந்தும் காணப்படும். இவை விரிந்து பரந்து வியாபித்துள்ள பிரபஞ்சத்தையும் அதனுள் சூட்சமமாக இறைவன் உள்ளான் என்பதையும் காட்டுகின்றன.

ஆனால் தஞ்சைப் பெருவுடையார் கோவில் கெர்ப்பக் கிருஹ விமானத்தை நோக்கினால், நேர்மாறான அமைப்புத் தோன்றும். கருவறை விமானம் வானளாவியும், கோபுரங்கள் தாழ்ந்தும் காணப்படும். இஃது பிரபஞ்சம் பெரிதென்றும் அதனிலும் பெரியோன் இறைவன் என்பதையும் பிரதிபலிக்கிறது.

மேலும் சிற்ப நூல்களில் கருவறை விமானத்தை **"ஸ்தூலலிங்கம்"** என்றும் கருவறைக்குள்ளிருக்கும் நிட்கள வடிவத்தை **"சூக்குமலிங்கம்"** என்றும் கூறப்படுகிறது. விஸ்வகர்மியம் என்ற சிற்பநூலில் விமானத்தை சிவசரீரம் என்றும் சிவரூபம் என்றும் நின்ற திருக்கோலத்தில் இருப்பதென்றும் கற்பிக்கப்பட்டிருக்கிறது. அந்நூலில் இது பற்றி நுணுக்க வருணனையும் காணப்படுகிறது. பொதுவாக ஒரு கருவறை விமானத்தில் அழகிய வடிவமும் வேலைப்பாடுகள் நிரம்பியதுமான அங்கங்கள், அடுக்குகள் பல உண்டு. அவற்றைக் கீழிருந்து முறையே உபானம், ஜெகதி, குமுதகம், கந்தரம், பட்டிகை, வேதிகை, ஸ்தம்பம், கபோதகம், உத்திரம், பிரஸ்தரம், ஹஸ்தி வேதிகை, கிரீவம், மஞ்சம், மஹாநாசி, பார்ஸ்வநாதி, சந்திரமண்டலம், பலிகை, பத்மம், மஹாபத்மம் ஸ்தூபி ஆகிய 20 உறுப்புக்களாகும். இவற்றைச் சிவரூபத்தின் பாதம், கெண்டைக்கால், முழங்கால், தொடை மேட்ரம் (அரை) நாபி, உதரம், ஸ்தனம், புஜம், புஷ்டிதம், கழுத்துரேகை, கழுத்து, உதடு, மூக்கு, காது, கண், நெற்றி, தலை, சிகை முதலிய உறுப்புக்களாகப் பாவிக்கின்றது.

சிவபிரானின் நின்றகோல உருவப் படத்தையும் விமானப்படம் ஒன்றையும் வரைந்து ஒப்புநோக்கினால் கட்டிடத்தையே உருவமாக எங்ஙனம் பண்டையச் சிற்பிகள் அமைத்துள்ளார்கள் என்பதைக் கண்டு மகிழ முடியும்.

மானுட உடல் உறுப்புறுக்களை அங்கம், மஹாங்கம், உபாங்கம், பிரத்யங்கம் என்று நான்காகப் பிரித்துக் கூறுவது போல இறைவனின் திருவுருவமாகக் கற்பிக்கப்பட்ட விமானத்தில் அதிஷ்டான (Basement) என்ற உறுப்பை மஹாங்கம் என்றும், ஸ்தம்பம் அல்லது சுவர்ப் பகுதியை (Superstructure) அங்கம் என்றும், பிரஸ்தரத்தை (Entablature) உபாங்கம் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரத்தை (Dome or Roof) பிரத்தியங்கம் என்றும் ஒரு சிற்ப நூல் கூறுகின்றது. ஓர் ஆலயத்தில் பிரதான மூர்த்தியின் இருப்பிடத்தை, கெர்ப்பக்கிருஹம் என்றும் அதன் முன் அவ்வங்கத்தோடு பிணைக்கப்பட்டதாக அமைந்த மண்டபத்தை அர்த்த மண்டபம் என்றும் இவற்றுடன் வேறுபல மண்டபங்களும், பிரகாரங்களும் அமைக்கப்பட்டிருக்கும். இவற்றுள் கெர்ப்பக் கிருஹத்தை மஹாங்கம் என்றும் அர்த்த மண்டபத்தை அங்கம் என்றும் மண்டபங்களை உபாங்கம் என்றும், பிரகாரங்களை பிரத்யங்கம் என்றும் ஒப்பிட்டு இறைவனின் சயனக்கோலமாக ஆலய உறுப்புக்களைச் சித்திரிக்கிறது வேறொரு சிற்ப நூல். இக்கருத்தை ஆகமநூல்கள் மிகவெளிப்படையாகக் கூறுகின்றன. கெர்ப்பக்கிருஹத்தை சிரசாகவும் அந்தராளப் பகுதியை (கருவறைக்கும் அர்த்த மண்டபத்திற்கும் இடையிலுள்ள சிறு இணைப்பு) முகமாகவும் சுகநாசியை கழுத்தாகவும் அர்த்த மண்டபத்தை புஜங்களாகவும் மஹா மண்டபத்தை வயிறாகவும், பிரகாரங்களைக் கால்களாகவும் கோபுரத்தை பாதமாகவும் கற்பித்து ஏகம் என்ற உணர்ச்சியை ஊட்டுகின்றன.

இறைவன் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் வீற்றிருக்கின்றான் என்ற கருத்தை உணர்ந்து உய்யும் ஆற்றல் எல்லா மனிதர்களுக்கும் அமைவது இயலாது. எனவே அடியார்களின் உடலாக ஆலய அமைப்பு கற்பனை செய்யப்பட்டு வெளிப்படையாகக் காட்டப் பெற்றுள்ளதாகப் பெரியோர் கூறுவர். இத்தகைய ஆலயங்கள் இரண்டு வகைத்தானவையென்று ஆகமங்கள் கூறும். "ஒன்று ஹிருதய கமலப் பிரஸ்தாரம்" மற்றொன்று "சரீரப் பிரஸ்தாரம்" பெரும்பான்மையான ஆலயங்கள் சரீரப் பிரஸ்தார வகையைச் சேர்ந்தவை, ஹிருதய கமலப் பிரஸ்தாரமாக அமைக்கப்பட்டிருப்பது சிதம்பரம் ஒன்றே சரீரத்திலுள்ள ஆறு ஆதாரங்களான மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகியவற்றை முறையே கெர்ப்பக் கிருஹம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம், ஸ்நபன மண்டபம், அலங்கார மண்டபம், சபர மண்டபம் ஆகிய வடிவமாக யோகிகள் கூறுவர். ஆயிரங்கால் மண்டபத்தை ஆயிரம் இதழ்கள் கொண்ட கமலமாகவும் (மூளையின் இருப்பிடம்) புஷ்கரணியை அமிர்தவாபியாகவும், பிராகாரங்களை பஞ்ச கோசங்களாகவும் கூறுவர்.

இறைவன் அருவ மேனியன் என்ற கருத்தை லிங்கத்தின் மூலமாயும், இவ்வருவமேனியன் அடியார்கள் பொருட்டு உருவம் தாங்கி சோமாஸ்கந்தராக விளங்குகின்றார் என்பதை கருவறை உட்சுவரில் அல்லது கருவறை விமானத்தில் சிற்ப வடிவமாகவும் காட்டியும், படைத்தல், காத்தல், ஒடுக்குதல், ஆகிய முப்பெரும் செயல்களை அவனே ஆற்றுகிறான் என்ற கருத்தை கருவறைக் கோஷ்டங்களில் அமைக்கப்படும், பிரம்மா, விஷ்ணு, தட்சணாமூர்த்தி உருவங்கள் மூலமாகவும் பிரகாரங்களில் அமைக்கப்பட்டு எட்டு, பதினாறு, முப்பத்திரண்டு பரிவாரங்கள் மூலம் பரம்பொருளின் ஆற்றல்களைத் தனித்தனியே பிரகாசப்படுத்தியும் அவையெல்லாம் மூலமூர்த்தியை ஆஸ்ரயித்த வண்ணம் அமைத்து ஒன்றோடொன்று தொடர்புடையனவாக அமைக்கப் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய நிர்மாண இலக்கணத்தையும், காவியப் படைப்புக்குத் தேவையான ஏக உணர்ச்சியையும் ஆய்ந்து பார்க்குமிடத்து பெரு வியப்பும், மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. பலப்பல கட்டிடங்கள், உறுப்புக்கள் ஆலய அமைப்புக்குள் இடம் பெற்றிருப்பினும் அவையனைத்தும் மூலஸ்தானக் கட்டிடத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்படுகின்றன. கருவறையில் நிலைநாட்டப்பட்டிருக்கும். லிங்கத்தின் அகலத்தை ஒரு அளவையாகக் கொண்டு அதைப்போல் மும்மடங்கினதாக ஆவுடையார் அகலம் அமைக்கப்படும். ஆவுடையார் அகலத்தைப் போல் மும்மடங்கினதான கருவறை உட்கூடு அமைக்கப்படும். கருவறை உட்கூட்டைப் போல் மும்மடங்கினதாகக் கருவறை சுவர்ப்புற அகலம் கொள்ளப்படும். பிறகு இந்த அகலப் பிரமாணத்தை ஒரு அளவையாகக் கொண்டு விமான உயரம், அந்தராளம், முகமண்டபம், மஹா மண்டபம், பரிவாரக் கோயில்கள், பிரகாரங்கள், துவஜஸ்தம்பம், குளங்கள், கோபுரங்கள் ஆகிய எல்லா அங்கங்களின் அளவுகள் நிர்ணயிக்கப்படும். மேலும் மூலஸ்தான மூர்த்தியின் பிரமாணத்தைக் கொண்டே பிற மூர்த்திகளின் அளவுகள் நிர்ணயிக்கப் பெறும். இத்தகைய அளவு முறை அழகிய தோற்றத்திற்காகவும் தத்துவக் கருத்துக்கு ஒப்ப அமைவதற்காகவும் எல்லா உறுப்புக்களையும் மூலஸ்தானத்திலே இணைப்பதற்காகவும் "ஏகம்" என்ற உணர்ச்சியை உருவாக்குவதற்கும் ஏற்பட்டவையென்றும் புலனாகும்.

காவியங்களாய்த் திகழும் நம் தென்னகத்துக் கோயில்களில் படைப்புத் திறத்திலே தலை சிறந்த கோயில் மதுரை மீனாட்சியம்மன் கோவில். சிற்ப நூல்களிலே காணப்படும் அரிய செய்திகளை ஒரே இடத்தில் கண்கூடாகப் பார்த்துத் தெளிவு பெற வேண்டுமென விரும்பினால் மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்பது தொன்று தொட்டு சிற்ப உலகத்தில் நிலவி வரும் கருத்தாகும். சிற்ப உலகில் சிற்பியர்களால் ஏதாவதொரு அலங்கார அமைப்பு தற்செயலாகவோ, முயற்சித்தோ கண்டு பிடிக்கப்படுமானால் அவ்வமைப்பு ஏற்கனவே மீனாட்சியம்மன் கோவிலில் அமைக்கப் பெற்றிருக்கும் என்று பழுத்த சிற்பிகள் சொல்வர். எனவே ஒரு பூரணமான சிற்ப நூலின் இலக்கணங்களுக்கு இலக்கியமாகவும் பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் விளங்குவது இப் பெருங்கோயில் இருப்பிடத்தாலும், பரப்பாலும், உன்னதத்தாலும், அலங்கார வேலைப்பாடுகளாலும் சிறந்த சிற்பங்களாலும், வண்ண ஓவியங்களாலும், நிர்மாணச் சிறப்பாலும், தெய்வ சாந்நித்யத்தாலும் பெருமையுடைய இத்திருக்கோயில் நன்கு புதுப்பிக்கப் பெற்றுப் புதுமைப் பொலிவுடன் இன்று காட்சி தருகின்றது.

மீனாட்சியம்மன் திருக்கோயிலில் பல்லாண்டுகளாகப் பழுதடைந்து பொலிவிழந்து கிடந்த சிற்ப வடிவங்களுக்கும், சிற்பக் கூடங்களுக்கும் ஜீரணோத்தாரணம் செம்மையாக நிகழ்ந்துள்ளது. அது போல் காலத்தால் பழுதடைந்து ஆதரவு குன்றி மறைந்துவந்த சிற்பக் கலைக்கே நமது பெருமைக்குரிய அரசாங்கம் ஜீரணோத்தாரணம் செய்து வருகின்றது. சிற்பக்கலைப் பயிற்சிக்கென்றே மாமல்லபுரத்திலும், சுவாமி மலையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு சிற்பக்கலைப் பயிற்சிக்கூடங்களை நிறுவி அவை மூலம் பண்டைய சிற்பமரபிற்கிணங்க தொழிற் பயிற்சியையும், நூல் பயிற்சியையும் ஓவியப் பயிற்சியையும், ஆலய, சிற்ப, தத்துவ போதனையையும் நமது இளைஞர்கட்கு அளிப்பது சிற்ப வரலாற்றிலேயே காணப்படாத சிறந்த செயலாகும். அரசங்கம் அளிக்கும் இவ்வாதரவின் மூலம் நமது பண்டைச் சிற்பக்கலை மரபுகள் பாதுகாக்கப் பெறுவதோடு சிற்பியர் வாழ்க்கையும் வளம் பெறும் என்று நம்புவோமாக!

## விபூதி தாரண பலம்

விபூதியை யிணிந்தவர் எவ்விடத்திற் போசனஞ் செய்கின்றாரோ அவ்விடத்திற் பார்வதி சமேதராகிய பரமசிவனும் உண்கின்றனர். உடம்பு முழுதுந் திருநீற்றை அணிந்தவரை எவர் பின்செல்கின்றனரோ அவர்கள் மகாபாதகராயினும் பரிசுத்தராகின்றனர் எனச் ஸுத சங்கிதை கூறுகின்றது. காலை, உச்சி, மாலையென்னு முக்காலங்களினுந் தரிக்கின்ற மெய்யன்பர் எக்குலத்தவராயினும் அவரைச் சிவபெருமான் என்றே பாவிக்ககடவர் என மானவ சங்கிதையிற் சொல்லப்பட்டிருக்கின்றது. மெய்யன்புடன் விபூதி தரிப்பவரிடம் சிவபெருமான் நீங்காது நிற்பர். அதனால் சர்ப்பம், சூரியன் முதலிய கிரகங்கள், நட்சத்திரங்கள், திசைத் தெய்வம், யமன், காலன், யமதூதர், அக்கினி, கொடுநோய்கள், அவுணர், இடி, பூதங்கள், சிங்கம், புலி, கரடி முதலிய கொடியனவற்றால் வருந்துன்பங்கள் அவரை அணுக மாட்டாவாம். அவர் இருவினைகளையும் வென்று சிவஞானம் பெற்று முத்தியடைவார். என்பது சத்தியம், முக்காலுஞ் சத்தியமேயாம்.

**பகைபிணி மண்ணைபன் மந்தி ரத்தினா**
**மிகையறன் கடையுள வெருட்சி பித்திடர்**
**வகையெனைத் தையுமற மாற்றி யாவர்க்குந்**
**தலைநல மளிப்பது தவள நீறரோ.**

- தணிகைப் புராணம்

விபூதி தரிக்கும் காலங்களில் ஓதவேண்டிய திருநீற்றுப் பதிகம் திருவருண்ஞானச் செல்வராய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாராற் கூன்பாண்டியனுடைய வெப்பநோயைத் தீர்த்தற்காகவும், எம்மனோரது பிறவித் துன்பங்களை வேரறக்களைதற்காகவும் ஓதியருளப்பட்டது. ஆதலால் தரிக்குங் காலத்து ஒவ்வொருவரும் அதனை மெய்யன்புடன் ஓதக்கடவர்.

**- யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி சைவசிந்தாந்த மகாசரபம் சிவஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் இயற்றிய 'சைவபூஷண சந்திரகை' என்னும் நூலில்லிருந்து.......**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனுண்ணலும் உயிர்ப்பலியும் சைவமக்கள் தவிர்க்க வேண்டியன

வித்துவான். க. சொக்கலிங்கம் எம். ஏ

சைவராகிய எமக்குக் கன்மம், மறு பிறப்பு என்பவற்றில் அழுத்தமான நம்பிக்கை உள்ளது. மாணிக்கவாசக சுவாமிகள் சிவபுராணத்தினைச் சைவராயுள்ள பாலர் தொடக்கம் முதியோர் வரை யாவருமே மனப்பாடம் செய்து ஒப்புவிக்கவும் ஆற்றல் பெற்றிருப்பதும் மறுக்கொணா உண்மை. வெள்ளிதோறும் பாடசாலைகளிலே சைவப்பிள்ளைகள் சிவபுராணத்தைப் பாராயணம் செய்துவரல் பரம்பரை பரம்பரையாக இடம் பெற்று வருவதே இதற்கு காரணம் எனலாம். மாணிக்கவாச சுவாமிகள், ஆன்மாக்களின் பிறவிகள் பற்றிக் கூறுவன இவை:

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறைவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்**
**எல்லாப் பிறப்பும்....................**

உலகிலுள்ள உயிரினங்களைப் பலகோடி யோனிபேதங்களாய்ப் பகுத்து நோக்குவதும் சைவ மரபேயாம். தொல்காப்பியம் உயிர்களை ஓரறிவுடையன தொடக்கம் ஆறறிவுடையன வரை ஆறுபகுப்புக்களுள் அடக்குகின்றது.

ஆக, உடலாலும், உருவாலும், அறிவாலும், திறனாலும், எறும்பும் மனிதப் பிராணியும் வேறுபட்டாலும் உயிர் என்ற வகைமையினுள்ளே இரண்டும் அடங்குவதால் ஒன்றுக்கு ஒன்று சமமானவையே. ஏனெனில் எறும்பு தனது மறுபிறப்பில் மனிதனாகலாம். மனிதன் தனது மறபிறப்பிலே எறும்பாகலாம். பிரார்த்த, ஆகாமிய, சஞ்சித வினைகளுக்கேற்ப பிறவிகள் நேர்கின்றன என்று நம்பும் சைவசமயி, எவ்வுயிர்க்கும் தன்னுயிர்போல் எண்ணியிரங்கும் கடப்பாடுடையவன், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் தானும் வாடுகின்ற மனப்பக்குவம் அருளாட்சி ஆகியன அமைந்த உள்ளமே சைவ உள்ளம்.

இவ்வுண்மையை உணர்ந்தமையாலேயே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவசமயிக்கான வரைவிலக்கணத்துள்ளே மது மாமிச போசனம் செய்யாமையையும் உள்ளடக்கினார் மது அருந்தலாற் பிறப்பன மயக்கம், வெறி என்பன மாமிசம் உண்ணலாற் பிறப்பன இரக்கமின்மை, கொடுமை ஆகியன இரண்டுமே சைவசமயிகளாலே தவிர்க்கப்படவேண்டியன.

சைவத்திருமுறைகளுள்ளே தோத்திரம், சாத்திரம் என்ற இருகூறுகளையும் தன்னுள் அடக்கியது திருமந்திரம், இது பத்தாவது திருமுறை, ஒன்பது தந்திரங்களைக் கொண்டுள்ள இந்நூலின் முதலாம் தந்திரம் இருபத்து நான்கு அதிகாரங்களாய் வகைப்படுத்தப்பட்டு வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்கான வழிகளைப் பலபட விரித்துரைக்கும் அவற்றுள் ஒன்று புலாலுண்ணலின் இழிவுகளை இடித்துரைத்தல் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“புலால் பொல்லதது அதனை உண்பவர் கீழானவர், புலையர்கள் அவர்களின் பாவம் மன்னிக்க முடியாதது. இப்புலையர்களை எல்லாரும் காண இயமனின் தூதுவர் இறுகப் பற்றி எரிவாய் நகரிலே மல்லாக்கத் தள்ளுவர், அங்கிருந்து வெளிவர முடியாதவாறு மறித்தும் வைப்பர்” என்பதாகிய கருத்தமைந்த திருமந்திரப் பாடல் இது

**“பொல்லாப் புலாலை நுகரும் புலையரை**
**எல்லோருங் கான இயமன்றன் தூதுவர்**
**செல்லாகப் பற்றித் தீவாய் நகரத்தில்**
**மல்லாக்கத் தள்ளி மறித்திருப் பாரே”**

இந்தக் கருத்துக்கு முன்னோடியாகவும், சாரமாகவும் பின்வரும் திருக்குறள் அமைந்திருத்தல் காணலாம்.

**‘உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண**
**அண்ணாத்தல் செய்யாது அளறு’**

‘ஒருசார் உயிர் உடம்பின்கண்ணே நிற்றல் ஊன் உண்ணாமை என்கின்ற அறத்தின் கண்ணது, ஆகலான் அந்நிலை குலைய ஒருவன் அதனை உண்ணுமாயின், அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது என்பது இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தந்துள்ள உரை. நிரயம் - ஒருவகை நகரம், அங்காவாது- வாயை (அண்ணாந்தி) திறவாது அஃதாவது புலாலுண்டவனை உண்ட நரகம், அவனை வெளியில் உமிழாது (இந்தக் குறட்பாவிற்கு நாமக்கல் கவிஞர், வே. இராமலிங்கம் பிள்ளை தமது புத்துரையிலே, ஊனை உண்பதற்கு நரகங்கூட வாய் திறக்காது ஆகவே ஊனை உண்ணலாகாது என்று பொருளுரைப்பதும் நோக்கத்தக்கதே.

நான் ஒரு பாடசாலையிலே அதிபராய்ப் பணிபுரிந்த காலத்தில் அப் பாடசாலையிலே கற்ற மாணவர் சமய தீட்சை பெறுதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டேன். பொருபாலான மாணவர் தீட்சை பெறவிரும்பிய போதும் அவர்களும் அவர்களின் பெற்றோரும் மாமிசம் உண்போராயிருந்தமையால் பெற்றோர் அவர்கள் சமயதீட்சை பெறுவதற்கு இசைவளிக்கவில்லை.

ஞானதஸ்தானம் பெறாதவனைக் கிறிஸ்தவ உலகம் கிறிஸ்தவனாய் ஏற்பதில்லை “சுன்னத்து” செய்து கொள்ளாதவன் முஸ்லிம் ஆவதில்லை ஆனால் சைவராவதற்கு இன்றியமையாத் தேவையான சமயதீட்சை பெறாதவரும் சைவர்களாகவே சைவ உலகால் ஏற்கப்படும் அவலநிலை உள்ளது. மாமிசம் உண்ணாதவரையே சிறப்பாகச் “சைவம்” “பிறவிச்சைவம்” என்று மதித்து பிரித்துச் சிறப்பிப்போர், தம்மை எவ்வகைச் சைவர்களாய் எண்ணுகின்றனர் என்பதும் விடுவிக்கமுடியாத புதிராகவே உள்ளது (மனித உடற்கூறுகளிலே பற்களும், இரைக் குழாயும், தாவர உணவிற்கு உகந்தனவாகவேயுள்ளன என்றும் மாமிச உணவிற்கு உகந்தன அல்ல என்றும் சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் தமது சைவ போதம் (முன்றாம் வகுப்பு) நூலிற் கூறியுள்ளார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊனுண்பை த தவிர்த்தல் இயலாது என்பதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.**

1. தமிழராகிய எம்முன்னோர் மாமிசம் உண்டமைக்குச் சான்றுகள் பழந்தமிழ் நூல்களான புறநானூறு முதலியவற்றிலே அந்தணரான கபிலரே இறைச்சி உண்டமைக்குப் புறநாநூற்றிலே சான்று உண்டு. (புறநானூறு - 14 ஆம் பாட்டு)

எனவே தமிழினத்தவரான நாம் மாமிசம் உண்பது மரபுவழிவந்த வழக்கம், அதனைத் தவிர்த்தல் இயலாது.

2. திருக்குறளிலே "புலாலுண்ணாமை" பற்றிய அதிகாரம் ஒன்றே உள்ளது. ஆனால் அந்த அதிகாரம், அறத்துப்பாலில், துறவறவியலிலேதான் அடக்கப்பட்டுள்ளது. இல்லறவியலில் புலாலுண்ணாமை சொல்லப்படவில்லை. எனவே புலன்களை அடக்கவேண்டிய துறவிகளைத்தான் திருவள்ளுவர் புலாலைத்தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தினாரேயன்றி இல்வாழ்வாரான எம்மையல்ல.

3. நோயினால் பீடிக்கப்பட்டோர் உடல் வலி குன்றியிருக்கும் காலங்களில் அவர்களுக்கு வைத்தியர்கள் முட்டை, மீன், இறைச்சி என்பவற்றை உண்ணுமாறு ஆலோசனை தருகின்றனர். மீனெண்ணெய்க் குளிசைகள் வழங்குகின்றனர், சில மருந்துகளிலேயே மது, மாமிச சாரங்கள் சேர்க்கப்படுகின்றன. வைத்தியர்களின் ஆலோசனைகளை ஏற்காமல் உடல் மேலும் நலிந்து நாம் இறத்தல் வேண்டும் என்கின்றீர்களோ?

4. மாமிசம் உண்ணல், மீனுண்ணல் என்பவற்றைத் தவிர்த்து எல்லோருமே தாவரபோசனிகளாய் மாறினால் எல்லோருக்கும் வேண்டிய காய்கறி வகை உற்பத்தி செய்வது இயன்றகாரியமா?

5. கடற்கரைச்சார்ந்த நிலங்களில் வாழ்பவர் தமது நிலம் பயிர்ச் செய்கைக்கு உகந்ததாயிராத போது காய்கறிகளை உற்பத்தி செய்யமுடியாது, அவற்றை விலைக்குப்பெறப் பொருளாதார வசதியற்றும் இருக்கையில் மீனையே தமது கறியாக கொள்வதைத் தவிர்க்கமுடியுமா?

6. இன்று உலகெங்கும் மீன், மாமிசம் உண்ணல் பெரும்பாலாரினால் தவிர்க்கப்படாத ஒன்றாய் உள்ளது. சைவர் என்ற ஒரே காரணத்துக்காக நாம் மட்டும் தவிர்த்தல் வேண்டும் என்பது முறையா?

**இவர்களுக்கு வழங்கக் கூடிய விடைகளான:**

1. எமது முன்னோர் தோண்டிய கிணற்று நீர், உவர் நீர் என்பதால், புதிய கிணறுகள் தோண்டாமல் பாட்டன் கிணறு என்று அவன் உவர் நீரையே நாம் அருந்துவமோ? இல்லையே மனிதன் பகுத்தறிவுடைய பிராணி "தக்கவின்ன தகாதனவின்ன" என்று பகுத்துக் காணும் பண்புடையோர், பாரம்பரியத்தினை இறுகப்பற்றும் அழுக்குகளாக வேண்டியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. துறவறவியலிலே புலானுண்ணாமை கூறப்பட்டிருப்பது உண்மையே அது போன்றே பொருளதிகாரத்தில் ஆட்சியாளர்க்கென வகுக்கப்பட்டுள்ள அரசியலிலே, கல்வியின் சிறப்புப் பேசப்படுகின்றதே. அவ்வாறானால் ஆட்சியாளர் தவிர்ந்த மற்றவர்களுக்குக் வேண்டியதில்லை என்று கல்வி கற்காமல் இருக்கின்றோமா? இல்லையே இன்று பெரும்பாலான ஆட்சியாளர்கள், அரசியல் வாதிகள் கல்விகற்ற பேரறிஞர்களாய் இருப்பார்களானால் மக்கள் ஏன் இத்தனை அவலங்களுக்கு உள்ளாகவேண்டும்?

3. கிருமிகள் நிறைந்ததும், நோய் வாய்ப்பட்டும், இறந்து போய்க்காலந் தாழ்த்திப்ப பயன்படுத்தும் பொழுது நாற்றமெடுத்தும் பலவகையில் உண்போர்களைப் பாதித்து நோய்களுக்கும் மரணத்துக்கும் உள்ளாக்குவன மீன்களும், இறைச்சிகளுமே என்பது அநுபவ வாயிலாகப் பலராலும் உணரப்படுவதொன்று.அடிக்கடி உணவுப் பதார்த்தய்களில் நச்சுத்தன்மை ஏறியதால் அவற்றை உண்டு நோய் வாயப்பட்டவர்கள் மாமிசபட்சனிகளேயன்றி மரக்கறி உண்டவர்களா? (மரவள்ளிக் கிழங்கு தவிர்ந்த பிற கிழங்கு வகைகளுக்கோ, காய்கறிகளுக்கோ நச்சுத்தன்மை இருப்பதாகத் தெரியவில்லை கீரைவகைகள் முதலியன பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றால் நச்சுத்தன்மையடைவது இயற்கையானதன்று).

4. கற்பனைக்கும் அப்பாற்பட்ட வகையில் மிகவேகமாக அறிவியல் வளர்ந்து வருங்காலம் இது.பெருகிவரும் சனத்தொகையின் உணவுத் தேவையை நிறைவு செய்யக் கடற்பாசியிலிருந்து புதியவகை உணவை உருவாக்கும் ஆராய்ச்சியும் இன்று மேற்கொள்ளப்படுகின்றது. மாமிசமுண்பவர்கள் ஒவ்வொருதடவையும் தாம் உண்ணும் மீன், இறைச்சி என்பவற்றிற்காய்க் கொல்லும் உயிரினங்கள் அவை அழியும் அளவிற்கு மீள் உயிராக்கம் பெறுகின்றனவா என்பதை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். மக்களின் தொகை பல காரணிகளாலே எண்ணிக்கையிற் குறைந்து வருவதுபோலப் பிராணியினங்களும் குறைந்து வரும் சாத்தியம் உண்டு என்பதை மறக்க முடியாது. எனவே மரக்கறி உணவோடு மேலதிக தேவைக்கு மீன், கோழி, ஆடு, மாடு, பன்றி முதலாம் பிராணிகளைப் பயன்படுத்துவதால் உற்பத்திச் சமநிலையும், தேவைச் சமநிலையும் உண்டாகின்றன என்பதும் ஏற்கத்தக்கதன்று.

5. கடற்கரைவாசிகளின் பொருளாதாரமும், உணவுத்தேவையும் மீன்களிலே தான் தங்கியிருக்கின்றன என்பது உண்மையே இவற்றிற்கு மாற்றீடுகள் கண்டுபிடிக்கப்படுவது கடினமென்பதை மறுத்தல் இயலாது. ஆனால் மனித முயற்சியும் திறனும் இவற்றிற்கு மாற்றீடு தேடுவதில் ஈடுபடுவது அவசியம்.

6. உலகம் பற்றிய பிரச்சினையல்ல இந்த உணவுப் பிரச்சினை. இது சைவசமயிகளின் உயர்நாடியான குறிக்கோட்பிரச்சினை அவர்களின் சமய அடிப்படை பற்றிய பிரச்சினை இரண்டையும் கலந்து குழப்ப வேண்டியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள சில கோயில்களிலே மீண்டும் உயிர்ப்பலி இடம் பெற்றதாக "உதயன்" பத்திரிகையிலே செய்திகள் வெளி வந்தன பலர் இக்கொடும் பாவத்தினைக் கண்டித்துக் கட்டுரைகளும் "வாசகர் திருமுகங்களும்" வரைந்திருந்தார்கள். யாழ்ப்பாணத்திலே சைவத்துக்கு எதிரான பாவச் செயல்கள் இடம் பெறவதைத் தட்டிக் கேட்கவும் சிலர் உள்ளனர் என்பது ஆறுதல் தருகின்றது. ஒருவர் உயிர்ப்பலியை ஆதரித்து, கடந்த காலத்தில் சில ஆண்டுகளாய் உயிர்ப்பலி நேர்த்தி இடம் பெறாமையே இன்றைய குருதிவெள்ளம், கொலை, அமைதியின்மை, அவலம் யாவிற்கும் காரணம் என்று எழுதியிருந்ததும் கவனத்தை ஈர்த்து வியப்பையும் திகைப்பையும் ஏற்படுத்தியது.

ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வேதங்கள் உருக்கொண்டன. நான்காகிய வேதங்களில் ஒவ்வொன்றும் பிராமணம், சங்கிதை, ஆரணியகம், உபநிடதம் என்ற நான்கு பிரிவுகள் கொண்டிருந்தது.பிராமணம் வேள்வி விதிகளை விரித்துரைத்து. சங்கிதை மந்திரங்களின் தொகுதியாய் அமைந்தது. ஆரணியகம் உண்முகத் தியானங்களாய் உருக்கொண்டது. உபநிடதம் பிரபஞ்சம், ஆன்மா, பிரமம் பற்றிய பிரசாரங்களில் ஈடுபட்டது.

தொடக்க காலத்தில் வைதிகர்களின் (வேதநெறி ஒழுகியோரின்) இல்லங்கள் தோறும் தீ வளர்க்கப்பட்டது. அத்தீயிலே அவர்கள் தாம் உண்ணும் உணவின் ஒரு பகுதியை இட்டு, தமது இஷ்ட தெய்வத்திடம் தமது வேண்டுதலைக் கூறி இட்டபூர்த்தி பெற்றதே வேள்விக்குத் தொடக்கமாய் அமைந்தது "காற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார்" ஆகிய மறையவர் வாழும் தில்லைத் திருப்பதி என்று திருஞானசம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்ததையும் இவ்விடத்தில் நோக்கலாம்.

ஆனால் காலப்போக்கில் தமது ஆட்சி நிலைபெறவும் அதிகாரம் மேலோங்கவும், ஆட்சி பரப்பெல்லை விரிவாகவும், செல்வம் அதிகமாகப் பெற்றுச் சிறக்கவும், தேவர் உலகில் அவர்களோடு சம இடம் பெறவும் என அரசர்கள் பெரும் எடுப்பில் வேள்விகளை நிகழ்த்தலாயினர். அஸ்வமேதம், வாஜபேயம், இராஸசூயம் முதலாகப் பலவகை வேள்விகள் நிகழ்ந்தன. வேள்வி முறைகளும் சிக்கலும், பல வித முறைகளும் வாய்ந்து விரிவடைந்தன. வேள்வியிலே பெரும் எண்ணிக்கையிலே விலங்குகள் பலியிடப்பட்டன, தீயில் இடப்பட்டன. அஸ்வமேதத்தில் அரயனின் பட்டத்துக் குதிரை பலியிடப்பட்டது. வேள்வியில் பலியாகும் விலங்குகள் பிறப்பெனும் தளையிலிருந்து விடுபட்டுச் சுவர்க்கம் சேரும் என்று நம்பப்பட்டது.

உண்முகத் தியானத்தை வற்புறுத்திய ஆரணியகங்களும், ஆழ்ந்த தத்துவ ஆய்வுமிகுந்த உபநிடதங்களும், லௌகிக வாழ்வுத் தேவைகளுக்கெனச் செய்யப்படும் பெரிய யாகங்களையும் அவற்றின் பெயரால் வழங்கப்படும் உயிர்பலியையும் கண்டித்தன. அவற்றைத் தவிர்க்கவேண்டும் என்று இடித்துரைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதிக மார்க்கங்களுக்கு எதிராகப் பின்னாளில் தோன்றிய சமண, பௌத்த சமயங்களின் முக்கியமான எதிர்ப்பே இந்த உயிர்ப்பலியையே தளமாகக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். வைதிகமார்க்கத்துக்கு இத்தகைய எதிர்ப்புக்கள் உள்ளிருந்தும் புறத்திருந்தும் உருக்கொள்ளத் தொடங்கிய பொழுதுதான் அது உயிர்பலி வழங்குதலாகிய வேள்விமுறையைத் தவிர்த்துக் கொண்டு, நெய், நெற்பொரி போன்றவற்றை அவிர்ப்பாகங்களாய் வழங்கும் கொலை தவிர் வேள்விமுறையினைக் கடைப்பிடித்தலாயிற்று. இது வரலாறு கூறும் செய்தி (ஆருகதர் என்பது சமணருக்கு வழங்கும் பெயர், இன்று காய்கறி உணவுவகைகளை ஆரதக் காய்கறி எனவும் அவ்வுணவினை ஆராதம் எனவும் வழங்குவது ஆருதகம் என்ற சொல் திரிந்து வந்ததனாலேயே என்பர் இதன் மூலமும், அவைதிகசமய எதிர்ப்பும் சைவரைத் தாவர உணவிற்கு உரியவராக்கின்றது என்னும் உண்மையை அறிந்து கொள்ளலாம். இன்று பாரத நாட்டில் மிகச் சிறுபான்மையராய் விளக்கும் சமணர் தாவரபோசனிகளே. ஆனால் பௌத்தர்களிற் பலர் சைவரிற் பலரைப் போலவே மாமிச உணவைத் தவிர்க்காதிருக்கின்றனர்.

தமிழ் நாட்டிலே இன்று மூன்று வகையான சமய நடைமுறைகள் சைவரிடையே நிலவுகின்றன.

1. வேத ஆகம முறைப்படி வேள்வியும் (யாகம்) பூசையும் கடைப்பிடிக்கப்படல்

2. தமிழரின் தொடக்ககால இயற்கைநெறிவழிபாட்டு முறைக்கேற்ப யாகமோ, மந்திரங்களோ இன்றி மௌன பூசை நிகழ்த்துதல் உதாரணமாக கதிர்காமம், சந்நிதி, முதலியவற்றில் இடம்பெறும் வழிபாடுகள்) இதனை பூதவழிபாடு எனவும் அழைப்பர்.

3. வேத ஆகமநெறிப்பட்ட தெய்வங்களோடு மதுரை வீரன் முதலாக உள்ள வரலாறோடு தொடர்புடைய வீரர்களுக்குத் தெய்வநிலையளித்து பழங்கால வீரக்கல் நாட்டு வழக்கத்தையொட்டி வழிபாடு நிகழ்த்தல் வைரவர், முத்துமாரி அம்மன் கண்ணகியம்மன் முதலாக வரலாறும் பௌராணிகளும் இணைந்த தெய்வங்களைக் கிராமிய தெய்வங்களாய் கொண்டு நடத்தும் வழிபாடு இதனுள் அடங்கும் இத்தகைய தெய்வங்களின் கோயில்கள் சிலவற்றில் கோழி, ஆடு முதலியவற்றைப் பலியிடலும் இடம் பெறுவதுண்டு.

சைவ சமயத்தினை வேதமாக முறைக்கிசையக் கோயில் அமைத்து அவ் விதிகளுக்கமைய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து, வேதாகமம் விதி தவறாது நித்திய, நைமித்திய பூசைகள் நடத்துதல் வேண்டும் என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களாலே அவர்தம் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தப்பட்டு வந்ததோர் அறிவுறுத்தலாகும். யாழ்ப்பாணத்திலே மிகப்புகழும் அற்புதமும் நிறைந்த கந்த சுவாமி கோயில் ஒன்று, அதற்குரிய குமாரதந்திர முறையினின்று விலகியதைக் கண்டு நாவலர் மனம் நொந்தனர். அதற்கு எதிராகக் கண்டனப் பிரசுரங்கள் வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுகாலை சிலர்,
சிறுதினை மலரொடு விரை இமறி அறுத்து
வாரணக் கொடியொரு வயின்பட நிறீ
ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்

எனவரும் திருமுருகாற்றுப் பாடலடிகள் போன்ற சிலவற்றை எடுத்துக்காட்டித் தினைச்சோறும், மறிஅறுத்தலும் (ஆடுவெட்டிப் பலியிடுதல்) ஊர் தோறும் முருகனுக்கு எடுத்த விழா அமிசங்களாய் இடம் பெற்றதாகக் கொண்டு, ஆகவே முருகப்பெருமானை வேண்டினர் வேண்டியாங்கு எய்தி வழிபடலாம் என்றனர் அவர்களை நோக்கி, நாவலர் அவர்கள், நீங்கள் சொல்வது உண்மைதான். அத்தகைய வழிபாடு வேடர்கள் போன்ற காட்டு வாசிகளால் நடத்தப்பட்டது. நீங்கள் வேடர்களா? அம்பும், வில்லுங்கொண்டு விலங்குகளை வேட்டையாடுவதா உங்கள் தொழில்? என்று பொருள்பட வினாவினர்

ஆகவே, சைவசமய கலாசாரத்தை உணர்ந்து அதற்கேற்ப நடக்க வேண்டிய சைவர்கள், அநாகரிகமான கொடுமையானது, இறைவனுக்கு உகவாததுமான உயிர்பலியை இருபத்தோரம் நூற்றாண்டின் வாயிலில் நிற்கும் இக்கால கட்டத்திலும் கடைப்பிடிக்க வேண்டுமா என்பதுதான் கேள்வி. இந்தக் கேள்வி எழுகின்ற அதே சமயத்தில் "ஆலய மகோற்சவ" காலத்தில் மட்டும் சைவ உணவுண்டு, விரதங்காத்து மகோற்சவம் முடிந்த அடுத்தநாளே மாமிசபேசன நாடுவதும் சரியானதா கேள்வி தொடர்ந்து எழுவதும் தவிர்க்க முடியாததே.

கோயிலில் மட்டும், எழுந்தருளி அருள் பாலிப்பதோடு இறைவன் நின்று விடுவதில்லை இருள், நிலனாய், தீயாகி, நீருமாகி, இயமானனாய் அட்ட மூர்த்தியாகிப் பிரபஞ்சம் எங்கனும் வியாபித்து நிற்கும் அவன், கோயில்லாத இடங்களிலே உயிர்ப்பலி செய்து, ஊனுண்பதை ஏற்பனா, சகிப்பானா என்பதையும் சிந்தித்துப் பார்ப்பது சைவராகிய எம் அனைவரதும் கடமையாகும்.

## சிவ வழிபாடு

சிவபெருமானின் வேறாகாத திருவருள் என்கின்ற சிவசக்தியே பார்வதி தேவியார் ஆதலால் அவரை வழிபடுவது சிவபெருமானை வழிபடுவதேயாம். புண்ணியஞ் செய்தவர்களுக்கு அநுக்கிரகமும் பாவஞ் செய்தவர்களுக்கு நிக்கிரகமுஞ் செய்யும் பொருட்டுச் சிவபெருமான் கருணையினாலே கொண்டருளிய மூர்த்தங்கள் அவருடைய திருக் குமாரர்கள் எனப்படுகிற விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்கடவுள் வைரவக்கடவுள் வீரபத்திரக்கடவுள். ஆதலால் அவர்களை வழிபடுவது சிவபெருமானை வழிபடுவதேயாம். குருவினிடத்தும் சிவனடியார் களிடத்தும் சிவசின்னமும் சிவமந்திரமும் சிவநாமமும் சிவமகிமையும் சிவசாத்திரமும் விளங்கக் காண்டலினால் அவர்களை வழிபடுவதுஞ் சிவபெருமானை வழிபடுவதேயாம்.

-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இயற்றிய
'குருவாக்கியம்' எனும் கட்டுரையில் இருந்து.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறைப் பிரதேசமும் அதன் சைவாலயங்களும்

## - ஒரு சமகாலப் பார்வை -

சண்முகலிங்கம் சஜீலன்,
பன்னாலை

சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் காங்கேசன்துறைப் பிரதேசம் மிகவும் முக்கியத்துவ உடையதொரு பிரதேசமாகும். வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே இப்பிரதேசம் தரை, மற்றும் கடல் வழிப் போக்குவரத்து, விவசாயம், கல்வி, நீதிபரிபாலனம், நிர்வாகம், தொழிற்றுறை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றில் சிறந்தோங்கியிருந்தது. விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பிருந்த நாகர் ஆட்சிக்காலம் தொடக்கம் மாருதப்புரவீகவல்லியின் வருகை நிகழ்ந்த காலம் முதலாக, பிற்காலச் சோழராட்சி நிலவிய காலம், தமிழ் அரசர்களான ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சி நடத்திய காலம் வரை இப்பிரதேசத்தில் சைவதமிழ்ப் பண்பாட்டின் தொடர்ச்சி பேணப்பட்டு வந்துள்ளதை அவதானிக்கலாம். இக் காலத்தில் கோவிற்கடவை என அழைக்கப்பட்ட கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை ஆகிய மூன்று பிரதேசங்களும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இதற்கு இப்பிரதேசத்தில் அமைந்திருந்த மிக முக்கியமான மூன்று சைவ ஆலயங்களே காரணமாகும். நகுலேஸ்வரம், மாவிட்புரம் கந்தசுவாமி ஆலயம், கசாயத்துறை ஆனந்த பிள்ளையார் ஆலயம். ஆகியவையே அவையாகும். இச் சைவ ஆலயங்களே இக் காலத்தில் தமிழர் பண்பாட்டின் அடித்தளமாக விளங்கியிருந்தது. ஐரோப்பியர் ஆட்சியில் குறிப்பாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியில் இப்பிரதேசம் கலாசாரப் பண்பாட்டு ரீதியில் சற்று நலிவுற்றிருந்தாலும், மற்றைய பல துறைகளிலும் செல்வாக்குடனேயே திகழ்ந்து வந்துள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியில் யாழ்ப்பாணத்திற்கும் தென்பகுதிக்குமான தரைவழிப் போக்குவரத்துப் பாதை அமைக்கப்பட்டதும் போக்குவரத்து ரீதியில் காங்கேசன்துறைப் பிரதேசத்தின் முக்கியத்துவம் குறைந்தது. எனினும் ஏனையவற்றில் இவற்றின் முக்கியத்துவம் அதிகரித்தே வந்துள்ளது.

இன்றைய காலத்தில் காங்கேசன்துறைப் பிரதேசத்தின் சைவத் தமிழ்ப் பண்பாட்டினை பொறுத்த வரையில் அவற்றின் வளர்ச்சிக்கும், நீண்டகாலத் தொடர்ச்சிக்கும் இப்பிரதேசத்தின் சைவ ஆலயங்களே முக்கிய பங்களிப்பினை வழங்கி வந்துள்ளன. இப் பிரதேசத்தின் கோயிற்கடவைப் பிரதேச ஆலயங்கள் தவிர்ந்த வேறு பல சைவ ஆலயங்களும் கூட பல வகைகளிலும் முக்கியத்துவம் உடையதாக விளங்கியுள்ளன. இப்பிரதேசத்தில் அமைந்துள்ள சைவ ஆலயங்களில் பல ஆலயங்கள் பிரசித்திபெற்றவையாக இருப்பதுடன் தொன்மையானதாகவும், வரலாற்றுப் புகழ்மிக்கவையாகவும், ஆலய அமைப்பு கட்டடக்கலை, ஓவியம், சிற்பம் ஆகியவற்றில் சிறப்புக்களை வெளிப்படுத்துபவையாகவும், பூசை வழிபாடுகள், ஆலயக் கிரியைகள், விசேட விழாக்கள், மகோற்சவ விழாக்கள் ஆகியவற்றில் பல தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளவையாகவும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இப்பிரதேசத்தின் சைவ ஆலயங்களின் வரலாற்றைப் பொறுத்தவரை 20ம் நூற்றாண்டில் இறுதி இரண்டு தசாப்தகாலங்களும், 21ம் நூற்றாண்டின் முதற் தசாப்தகாலமும் ஓர் இருண்டகாலம் என்றே கூறலாம். 1980களின் பிற்பகுதியில் ஏற்பட்டயுத்தமும், இராணுவ நடவடிக்கைகளும் இப்பிரதேசம் முழுமையாக உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டமையும், இப்பிரதேசத்தில் பன்னெடுங்காலமாக உயர்ந்து நின்ற பல சைவ ஆலயங்களை சிதைத்து அழித்ததுடன் பல கோடிப் பெறுமதியான சொத்துக்கள், உடைமைகள் என்பவற்றையும் அழித்தொழித்து விட்டது. இவை தவிர இப்பிரதேசத்தில் மக்களின் பாரம்பரியமான வாழ்விடங்கள், குடிமனைகள், சொத்துக்கள் ஆகியவையும் அழிக்கப்பட்டதுடன் உயிரச் சேதங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இன்று இப்பிரதேசங்கள் பல இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதுடன் மக்கள் படிப்படியாக மீள் குடியேறுவதுடன் தமது பாரம்பரிய வழிபாட்டிடங்களை மீள் புனரமைப்புச் செய்து வருகிறார்கள். சில ஆலயங்கள் மீள்புனரமைப்பு செய்யப்பட்டு கும்பாபிசேகங்களும் நடைபெற்றுள்ளதுடன், பூசை வழிபாடுகளும் உற்சவங்களும் நிகழ்ந்து வருகின்றன. எனினும் இன்னும் சில பகுதிகள் விடுவிக்கப்பட வேண்டியிருப்பதுடன் அவ்விடங்களிலுள்ள ஆலயங்களும் மீள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியுள்ளது.

இக் காங்கேசன்துறைப் பிரதேசத்தில் மிகமிக அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில தொல்லியல் அகழ்வாய்வுகள் எமது தமிழ்ப் பண்பாட்டின் வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுவதாயுள்ளது என கலாநிதி செ. கிருஸ்ணராசா அவர்கள் தனது அண்மைய ஆய்வுக் கட்டுரையொன்றில் கூறியுள்ளார். அதாவது தற்போது அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் மயிலிட்டித்துறைமுக புனர்நிர்மாண வேலைத்திட்டத்தின் போது கடற்படுக்கையை ஆழப்படுத்தும் செயற்பாட்டின்போது கிடைத்த சில தொல்லியல் எச்சங்கள் மிகுந்த கவனத்தை ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது. பழங்காலத்திற்குரிய கல்லினால் செய்யப்பட்ட ஆயுதங்கள் (கல்லாயுதம்), வெண்படிக்கண்ணாடிக்கல்லாலான Blade எனப்படும் கருவி, கல்லினால் செய்யப்பட்ட முத்திரை போன்ற அமைப்புடைய வட்டவடிவமான கல், சுடுமண் நாணயக்குற்றி, கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்கள், ரோமானிய, கிரேக்க மட்பாண்டங்கள் என்பன இங்கு கிடைத்துள்ளன. இவைகுறுணிக்கற்காலப் பண்பாட்டினைத் தொடர்து பெருங்கற்கால வாழ்வு முறையிலான குடியிருப்புகள் மயிலிட்டித்துறை முகத்தினையண்டியுள்ள தையிட்டி, வீமன்காமம், பழந்துறை, வீரமாணிக்கதேவந்துறை, பெரியதேவந்துறை, கட்டுவன், நரசிங்கதேவன்புலம், சங்குவத்தை ஆகிய பழங்கிராமங்களில் நிலை பெற்றிருந்ததை உறுதிப்படுத்துகிறது. எதிர்காலத்தில் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் தொல்லியலாய்வுகள் மூலம் இதன் பலபரிமாணங்கள் வெளிப்படுத்தப்படலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் பிரதேசசபைகளின் நிர்வாகக் கட்டமைப்பு ரீதியாக காங்கேசன்துறைப் பிரதேசமானது (காங்கேசன்துறை உப அலுவலகம்) காங்கேசன்துறை மேற்கு (J/233) காங்கேசன்துறை மத்தி (J/234)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறை தெற்கு (J/235) தையிடட்டி கிழக்கு (J/247) தையிட்டி வடக்கு (J/249) தையிட்டி தெற்கு (J/250) மயிலிட்டித்துறை வடக்கு (J/251) ஆகிய கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள சைவ ஆலயங்கள் பற்றிய பார்வையாகவே இக்கட்டுரை அமைகிறது. காங்சேசன்துறை மேற்கில் அமைந்துள்ள யாத்திரை செல்லப்பிள்ளையார் ஆலயம் பழைமையான ஓர் ஆலயமாகும். யாழ்- காங்கேசன்துறை வீதிக்கண்மையில் அமைந்துள்ள இவ்வாலயம் இவ் வீதியால் சென்று வருவோரின் வழிபடு தலமாகவும் உள்ளது.

அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம், வசந்தமண்டபம், மணிக்கூட்டுக்கோபுரம், மடைப்பள்ளி, களஞ்சியஅறை ஆகிய கட்டட அமைப்புக்களுடன் முருகன், கஜலட்சுமி, வைரவர், நாகதம்பிரான், சண்டேஸ்வரர், நந்தி, பலிபீடம் ஆகிய பரிவார மூர்த்திகளுடன் இவ்வாலயம் அமைந்திருந்தது. இவ்வாலயத்தின் முன்பக்கத்தில் வரையப்பட்டிருந்த ஓவியம் மிகுந்த கவனத்தைப் பெற்றிருந்தது. அதில் விநாயகர் அம்மை அப்பரிடம் மாங்கனி வாங்கும் ஓவியம் மிகவும் தத்துரூபமாக வரையப்பட்டிருந்தது. அதற்கருகில் ஆலய வருங்கால அமைப்புத்திட்டம் எனும் ஓவியமும் வரையப்பட்டிருந்தது. அதில் எதிர்காலத்தில் அமைக்கப்படவிருந்த ஐந்துதள இராஜ கோபுரத்துடனும் இருமணிக் கூட்டுக்கோபுரத்துடனும் கூடிய ஆலயத்தின் அமைப்பு வரையப்பட்டிருந்தது. எனினும் யுத்தகாலத்தில் ஆலயம் மிகவும் கடுமையாகச் சேதமுற்றிருந்ததுடன் ஓவியங்களும் அழிவடைந்திருந்தன. தற்போது இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சியளிப்பதுடன் பழைய ஓவியங்களும் புத்துயிர் பெற்றுள்ளன சில ஓவியங்கள் ஆலய உட்பிரகாரச் சுவரில் வரையப்பட்டுள்ளன. 23-08-2020 இல் புனருத்தாரண கும்பாபிசேகம் நடைபெற்றுள்ளது. தற்போது ஆலயத்தில் பூசை வழிபாடுகள் கிரமமாக நடைபெறத் தொடங்கியுள்ளன. இரண்டு மண்டபங்களுடன் கூடிய சிறிய கோயிலாக பூசைவழிபாடுகள் நடைபெற்றுவந்த மாம்பிராய் வைரவர் ஆலயம் யுத்தகாலத்தில் முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டிருந்தது. மக்களின் மீள்குடியேற்றத்தின் பின்னர் தற்போது இவ்வாலயம் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் 30.01.2020இல் கும்பாபிசேகமும் செய்யப்பட்டுள்ளது. தற்போது ஆலயத்தில் விசேட விழாக்களும் அலங்கார உற்சவங்களும் நடைபெற்று வருகின்றன. இப்பகுதியில் அமைந்துள்ள ஐயனார் ஆலயம் தற்போது உயர்பாதுகாப்புவலயப் பிரதேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன் ஆலயத்தை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மாங்கொல்லை வைரவர் ஆலயம், சீமெந்துக்கூட்டுத்தாபன வைரவர் ஆலயம் என்பன இப்பகுதியில் அமைந்துள்ள ஏனைய ஆலயங்களாகும்.

காங்கேசன்துறை மத்தியில் அமைந்துள்ள கசாயத்துறை ஆனந்தப் பிள்ளையார் ஆலயம் மாருதப்புரவீகவல்லி காலத்திற்கும் முந்தியது. மாருதப்புரவீகவல்லி வழிபட்ட தலமாகவும் கருதப்படுகிறது. மாருதப்புரவீகவல்லியும் அவளது படைபரிவாரத்தினரும் தீர்த்த யாத்திரை மேற் கொண்டு ஈழத்தை நோக்கி (காங்கேசன்துறை) வரும் போது அவர்கள் பயணம் செய்த படகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயற்காற்றினால் அங்கும் இங்கும் ஆடவே தமது பயணத்தில் ஏற்பட்டிருக்கும் இடையூறை நீக்கியருளுமாறு அவர்கள் ஆனந்தப்பிள்ளையாரைத் தமது மனத்தின் கண் வேண்டி வழிபட்டதாக மாவைக்கந்தன் கப்பற்பாட்டு கூறுகிறது. அத்துடன் தட்சிணகைலாசமான்மியம், யாழ்ப்பாண வைபவமாலை ஆகியவற்றிலும் இவ்வாலயம் பற்றிய வரலாறு கூறப்பட்டுள்ளது. இத்தகு பெருமை பெற்ற இவ்வாலயத்தின் மூலமூர்த்தி சுயம்புலிங்கப்பிள்ளையாராகும். திரிபுரசுந்தரி, ஸ்ரீ கதிரவேற் குமரன், வைரவர் ஆகிய பரிவாரத் தெய்வங்களுடனும் கூடிய இவ்வாலயத்தில் பூஜை வழிபாடுகளும் உற்சவங்களும் சிறப்பாக நடைபெற்று வந்தன. யுத்த அனர்த்தச் சூழல் நிலவிய போது உயர் பாதுகாப்பு வலயத்துள் இருந்த ஆலயம் மிகக் கடுமையாகச் சேதமுற்று அழிவடைந்திருந்தது. தற்போது ஆலயம் முழுவதுமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. முன்னர் வழிபடப் பெற்ற சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய முன்றலில் பிரதி'டை செய்யப்பட்டுள்ளது. ஆனந்தப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையிலேயே முத்துமாரியம்மன் ஆலயம், வீரபத்திரர் ஆலயம் ஆகியனவும் அமைந்துள்ளன. 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் பூசை வழிபாடுகளும் உற்சவங்களும் சிறப்பாக நடைபெற்று வந்த இவ்வாலயங்களும் யுத்தத்தால் கடுமையாகச் சேதமுற்றிருந்தன. முத்துமாரியம்மன் ஆலயம் புனரமைக்கப்பட்டு ஆனிமாதம் 2020இல் கும்பாபிசேகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது இவ்வாலயத்தில் பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. வீரபத்திரர் ஆலயம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இவை தவிர வைரவர் ஆலயம், குட் செற் பிள்ளையார் ஆலயம் ஆகியனவும் இக்கிராமசேவையார் பிரிவினுள் உண்டு.

காங்கேசன்துறை தெற்கில் குருநாதசுவாமி கோயில், குமார கோயில், கூடலூர் இராஜ ராஜேஸ்வரி அம்பாள் கோயில், காளி கோயில், முத்துமாரி அம்மன் கோயில் ஆகியன உண்டு. குருநாதசுவாமி கோயில் போத்துக்கீசர் காலத்திற்கும் முற்பட்டது. சுன்னாகம் வரத பண்டிதர் (கி.பி 1656- கி.பி 1716) குருநாதசுவாமி கிள்ளை விடு தூது எனும் தூதுப்பிரபந்தமொன்றை இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது பாடியுள்ளார். யுத்தத்திற்கு முன்னர் திருவிழாக்கள் மற்றும், விசேட பூசை வழிபாடுகளுடன் சிறப்புற்றிருந்த இவ்வாலயம் தற்போது முற்றாக அழிவடைந்துள்ளது. ஆலயத்தை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியமுடிகிறது. குமார கோயில் என்பதும் ஓர் முருகன் கோயிலாகும். இக்கோயில் தற்போது புனருத்தாரணம் செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு கும்பாபிசேகம் செய்யப்பட்டுள்ளது. மூல மூர்த்தி வேற்பெருமான் பரிவார மூர்த்தியாக பிள்ளையார் உள்ளார். மூலஸ்தானம், அர்த்தமண்டபம், தரிசனமண்டபம் ஆகியவற்றுடன் மணிக்கோபுரம், கிணறு ஆகியனவும் உண்டு. மணிக்கோபுரம் 1979 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. தலவிருட்சமாக அரசு உள்ளது.

தையிட்டி கிழக்கில் அமைந்துள்ள கணையவிற் பிள்ளையார் ஆலயம் அல்லது கணேசவிற் கோட்டப்பிள்ளையார் ஆலயம் பழம் பெருமையும், வரலாற்றுப் புகழும் மிக்க ஆலயமாகும். இது சோழர்காலத்தில் சோழ அரசனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதானியாக விளங்கிய வரராசசிங்கவளவன் எனும் மன்னனால் கட்டப்பட்டது. 200 வருடங்களுக்கு மேலாக மகோற்சவமும், விசேடவிழாக்களும் நடைபெற்ற ஆலயமாகும். இவ்வாலயத்தில் பல அறிஞர்களின் சொற்பொழிவுகளும் நடைபெற்றுள்ளது. கட்டடக்கலை அம்சங்களில் சற்று வித்தியாசமான அமைப்பையும் இவ்வாலயம் கொண்டிருந்தது. ஆலயத்திற்கு மேற்குப் பக்கத்தில் ஒரு திருக்குளம் (கணையவில்குளம்) அமைந்திருப்பதால் குளத்தடிப் பிள்ளையார் ஆலயம் எனவும் அழைக்கப்படுகின்றது. 1910, 1942, 1953, 1981 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிசேகம் நடைபெற்றுள்ளது. மூலமூர்த்தி சர்வார்த்த சித்திவிநாயகப் பெருமான் என்பதாகும். முருகன்,சண்டேஸ்வரர்,வைரவர் ஆகிய பரிவாரத் தெய்வங்களுமுண்டு. அண்மையுத்த அனர்த்தத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட இவ்வாலயத்தில் தற்போது புனருத்தாரணப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. புதிதாக கஜலட்சுமி சந்நிதியும் கட்டப்பட்டுவருகிறது. சுன்னாகம் வரத பண்டிதரால் இயற்றப்பட்ட மிகப் பழைமையான ஊஞ்சல்பதிகம் இவ்வாலயத்திற்கு உள்ளது. எனினும் அப்பதிகத்தின் மூன்று செய்யுள்களே தற்போது கிடைக்கின்றன. தையிட்டி கிழக்கில் அமைந்துள்ள இன்னொரு பிள்ளையார் ஆலயம் அரசடிசித்தி விநாயகர் ஆலயமாகும். 300 வருடங்களுக்கு முற்பட்ட இவ்வாலயமும் வரராசசிங்க வளவன் எனும் மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டதாகும். இந்தியாவிலிருந்து கொண்டுவந்த லிங்கத்ததை அரசமரத்தின் கீழ் வைத்து வழிபட்டதாகக் கூறப்படுகிறது. சங்கிலி மன்னன் இவ்வாலயத்தை கட்ட எடுத்த நடவடிக்கை அவனது வீழ்ச்சியால் கைவிடப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது. நித்திய பூசைகளும், விசேட திருவிழாக்களும் இவ்வாலயத்தில் நடைபெற்று வந்தது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு சித்திரை மாதம் 2017ஆம் ஆண்டு கும்பாபிசேகம் செய்யப்பட்டது. கரையான்காடு வப்பத்தை அம்பாள் வைரவர் ஆலயமும் இப்பகுதிலுள்ள ஓர் ஆலயமாகும்.

தையிட்டி வடக்கில் துர்க்கை அம்மன் ஆலயம் உள்ளது. மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம், ஸ்தம்பமண்டபம் மணிக்கோபுரம் ஆகியவற்றுடன் மேற்குவாயிலையுடைய இவ்வாலயம் மிகவும் சேதமடைந்துள்ளது. ஆலயத்தின் கொடிக்கம்பம் தூர்வடைந்த நியைில் உள்ளது. தையிட்டி தெற்கில் தூதிலிடைக் கண்ணகி அம்மன் ஆலயம், குருந்துவீதி கண்ணகி அம்மன் ஆலயம், முனியப்பர் ஆலயம், சுடுகாட்டு ஞானவைரவர் ஆலயம்,நாகதம்பிரான் ஆலயம் என்பன உள்ளன. தூதிலிடைக்கண்ணகியம்மன் ஆலயம் 1825 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு உள்ளது. மூலமூர்த்தி கண்ணகி அம்மன், பரிவார மூரத்திகளாக பிள்ளையார், நாகதம்பிரான், வைரவர், சந்தானகோபாலர் ஆகியோர் உள்ளனர். நித்தியபூசையுடன் விசேட உற்சவங்களும் நடைபெற்றுவந்தது. அண்மைய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆலயம் தற்போது பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனரமைப்புப்பணிகள் நடைபெற்றுவருகிறது. குருந்துவீதி கண்ணகி அம்மன் ஆலயம் போர்த்துக்கீசர் காலத்திற்கு முற்பட்டது. பின்னர் போர்த்துக்கீசரால் இவ்வாலயம் இடிக்கப்பட்டது. அனேக ஆண்டுகளுக்கு பின் கண்டெடுக்கப்பட்ட விக்கிரங்களை வைத்து ஊர் மக்கள் கண்ணகையம்மன் ஆலயம் என பெயர்சூட்டி வழிபட்டு வந்தனர். தினமும் ஒரு காலப்பூசையுடன் விசேட காலங்களில் வழிபாடுகளும் நடைபெற்று வந்தது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஆலயம் தற்போது புனரமைப்புச்செய்யப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனியப்பர் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 22.07.2019 இல் கும்பாபிசேகம் செய்யப்பட்டுள்ளது. சுடுகாட்டு ஞானவைரவர் ஆலயம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. சித்திரைப் பௌர்ணமியில் விசேடவிழா இங்கு நடைபெறுகிறது.

மயிலிட்டித்துறை வடக்கில் வீரமாணிக்கதேவன்துறை கண்ணகி அம்மன் ஆலயம் முனையன் வளவு முருகையன் ஆலயம், தோப்பு பிள்ளையார் ஆலயம், சங்குவத்தை மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் திருப்பூர் பேச்சியம்மன் என அழைக்கப்படும் முத்துமாரி அம்மன் ஆலயம், மார்புநோய் வைத்தியசாலை முருகன் ஆலயம் ஆகியன அமைந்துள்ளன. வீரமாணிக்க தேவன்துறை கண்ணகியம்மன் ஆலயத்தில் பல்லவர் காலத்துச்சிலா விக்கிரகமான கண்ணகியம்மன் விக்கிரகம் உண்டு. பரிவாரமூர்த்திகள் சிவன், அம்மன், வைரவர் தினமும் மூன்று காலப்பூசையுடன் விழாக்கள் நடைபெற்று வந்தது. மூன்று தளங்களைக் கொண்ட இராஜகோபுரத்தில் கண்ணகி வரலாறு சிற்ப வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. மயில்வாகன ஐயர் பாடிய ஊஞ்சல் பதிகம் இவ்வாலயத்திற்குள்ளது. அன்றைய யுத்த அனர்த்தம், உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக ஆலயம் சேதமடைந்திருந்தது. ஆலயத்தின் பழைய சித்திரத் தேரும் சிதைவடைந்துள்ளதுடன் அது தற்போதும் ஆலய முன்றலில் காணப்படுகிறது. மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டதும் 2018இல் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டதுடன் புனருத்தாரண வேலைகள் நடைபெற்று 2019 ஆம் ஆண்டு கும்பாபிசேகம் செய்யப்பட்டுள்ளது. முனையன் வளவு முருகையன் ஆலயம் இற்றைக்கு சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டதாகும். மூலமூர்த்தி வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமான். அன்றையயுத்த அனர்த்தம் மற்றும் உயர் பாதுகாப்பு வலயப்பிரகடனம் காரணமாக ஆலயம் மிகவும் பாதிப்படைந்திருந்தது. தற்போது புனரமைப்புப்பணிகள் நடைபெற்று 04.09.2019 இல் கும்பாபிசேகம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக ஐந்துதள இராஜகோபுரமும் கட்டப்பட்டுள்ளது. தற்போது கந்தசஷ்டி உற்சவம் உட்பட பல உற்சவங்களும் சிறப்பாக நடைபெறத் தொடங்கியுள்ளது. சங்குவத்தை மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் முற்றாகத் தரைமட்டமாகியிருந்தது தற்போது புதிய ஆலயத்தின் கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. வீரமாணிக்க தேவன்துறை கண்ணகியம்மன் ஆலயத்துடன் இணைந்ததாக உள்ள தோப்பு பிள்ளையார் ஆலயம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

திருப்பூர் பேச்சியம்மன் ஆலயம் 100 ஆண்டுகளுக்கு முற்பட்டது. சிறு கொட்டகை அமைப்புடைய ஆலயத்தில் பேச்சியம்மன் வழிபாடு நீண்டகாலமாக நடைபெற்று வந்தது. மயிலிட்டித்துறைக் கிராம மக்களுக்கும் தென்னிந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள ஊர்களுக்குமிடையில் வர்த்தக, வாணிப, கலாசாரப்பண்பாட்டுத் தொடர்புகள் மிக நீண்டகாலமாகவே நிலவிவந்துள்ளது. தமிழ் நாட்டில் அமைந்துள்ள திருப்பூர் என்ற ஊரிற்கும் இவ்வம்மன் ஆலயம் அமைந்துள்ள ஊரிற்குமிடையில் நெருங்கிய பல ஒற்றுமைகள் இருப்பதை அவதானித்த இவ்வூர் மக்கள் இவ்விடத்திற்கு திருப்பூர் எனப் பெயரிட்டு திருப்பூர் முத்துமாரி அம்மன் எனப் பெயர் வழங்கி வந்தனர். 1987ஆம் ஆண்டு ஆலயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கோயிலாக கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வந்தன. துரதிஷ்ட வசமாக 1990இல் ஏற்பட்ட யுத்தத்தினாலும், இடப்பெயர்வினாலும் இம்முயற்சி பாதிக்கப்பட்டதுடன் ஆலயமும் முற்றாக தரைமட்டமாகியிருந்தது. மீண்டும் 30 வருடங்களிற்குப்பின் மக்கள் இப்பிரதேசத்தில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டதும் ஆலயத்தை மீளக் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. 05.09.2019 இல் மூலஸ்தானத்திற்கான அடிக்கல் நாட்டப்பெற்று ஆலயப்புனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருப்பூர் ஒன்றியம் இவ்வாலய பரிபாலனத்தை மேற்கொண்டு வருகிறது.

இக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள ஆலயங்களின் வரலாறு முழுமைப்படுத்தப்பட்ட வரலாறல்ல. ஆலயங்கள் பற்றிய வரலாற்றுத் தேடலின் ஆரம்பப்புள்ளியாகும். எதிர்காலத்தில் இச் சைவாலயங்களின் வரலாறு முழுமையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். முப்பது வருடங்களாக நடைபெற்ற அண்மைய யுத்தமும், உயர்பாதுகாப்பு வலயப் பிரகடனமும் வலிகாமம் வடக்கின் பெரும்பாலான பகுதிகளை சிதைத்து அழித்துள்ளதால் எம்மிடமிருந்த பல விடயங்கள் மறைந்து போயிற்று. எனவே அதனை மீட்டெடுப்பதற்கும், இருப்பவற்றைப் பாதுகாப்பதற்கும் எமது இப் பிரதேசத்தின் அத்தனை விடயங்களும் ஆய்வுசெய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசரமானதும், அவசியமானதுமான செயற்பாடாகும். இதன் மூலம் எமதும் எமது எதிர்கால சந்ததியினதும் ஆரோக்கியமான நல்வாழ்வுக்கு வழிசமைக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

## அடியார் உள்ளம்

**தீப்தம் என்ற ஆகமத்தின் ஞான பாதத்தில் கூறப்பட்டுள்ள, பக்குவம் வாய்ந்த அடியார்களின் உள்ளத்தில் உள்ள 8 பொருள்கள்**

1) அனைத்து உயிர்களிடத்தும் கருணை காட்டுதல்.

2) தமக்கு பிறர் இடர் விளைத்தாலும், பொறுத்துக் கொள்ளும் ஆற்றல்.

3) அழுக்காறு கொள்ளாதிருத்தல்.

4) தூய உடலோடும், தூய உள்ளத்தோடும் எப்போதும் இருத்தல்.

5) தமக்கு நல்லவைவரினும், தீயவைவரினும் மகிழ்ச்சியோ, துன்பமோ கொள்ளாமல், அனைத்தையும் அருள் மயமாகவே ஏற்றுக் கொள்ளல்.

6) அனைத்து உயிர்களும் சுகம் பெற வேண்டும் என விழைந்திருத்தல்.

7) நியாய வழியில் சம்பாதித்த பொருளால் பதி புண்ணியமான செயல்களைச் செய்தல்.

8) அத்துவித ஆனந்தம் என்பதாகிய சிவானந்தப் பேற்றை அடைவதில் தீவிரமான வேட்கை கொண்டிருத்தல்

ஆகம வாரிதி, முனைவர் சிவஸ்ரீ சபாரத்தின சிவாச்சாரியார் அவர்களின் 'உள்ளம் கவர் கள்வன்' கட்டுரையிலிருந்து ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை தொடக்க கோபுரம்

பூ. செல்வதியம்மா B.A (Hons),
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

**பல்லவி**

தெல்லியூரின் வீதி தனில் தெருவில் நிற்க காட்சி தரும்
வண்ணநிலைக் கோபுரமாம் வானுயர்ந்த புகழ் நிலையாம்.

**அனுபல்லவி**

பஞ்ச எனும் நிலை கொண்டு பார் தனில் எழுச்சியுடன்
பவனி சிறக்க வரப்போகும் பாதை தொடக்க கோபுரமாம்.

**சரணம் - 01**

இராஜ ராஜ சோழன் புகழ் வானுயர்ந்த கோபுரத்தில்
இராஜ கோபுரமாக தெல்லியூரில் முதல் துலக்கம்.
அன்னையவள் அருளாசி அடியவர்க்கு அருட்காட்சி
சொன்ன குரு யோக நாதன் சொற் கோபுர நிலை காண்போம்.

**சரணம் - 02**

கொடிய நோயின் தாக்கமது
கெட்டொழிந்து போய் விடவே
கோடி கோடி பக்தர்களுள்
குடி கொள்ளப் போகும் திருக்காட்சி.

ஈழத்திரு நாட்டினிலே
இன்று வரை இல்லாத
இனிய தொரு புதுப்பணியில்
இயங்கப் போகும் திருத்தலமாம்.

**சரணம் - 03**

அடிக்கல்லின் நாட்டுகையை
அற்புதமாய் ஆரம்பித்தோம்
குட முழுக்கு நிகழ்வு தனை
குறையின்றிக் கண்டிடவே.

இன்று இந்த பூரிப்பு
என்றும் எங்கள் சந்ததியும்
கண்டுகண்டு இன்ப முற
கலைநயமாய் திகழ்ந்திடுமே.

**சரணம் - 04**

முன் வாயிற் கோபுரத்தால்
முதல் வணங்கி போகையிலே
உள்ளம் கொள்ளும் உவகையதை
உலகில் சொல்ல வார்த்தை இல்லை.

அன்னை துர்க்கா தேவியின்
அருட்பார்வை நிலையங்கு
கோபுரத்தின் தரிசனமாய்
கோடி கோடி புண்ணியமாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடும் அதன் தத்துவமும்

சிவஸ்ரீ வை. சோமஸ்கந்தக் குருக்கள்

பரம கருணாநிதியாகிய இறைவன் அவரவர்கள் கருமங்களுக்கு ஏற்ப நல்வினை தீவினையை அனுபவிக்கும் பொருட்டே இவ்வுடம்பை அளித்துள்ளார். பசுக்களாகிய மக்கள் ஈடேற ஒரேயொரு வழிகாட்டினார், அது சிவாகமத்தின் மூலம் பெறப்படுவதாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறுகளில் வீடாகிய பேறுதான் ஆன்மாவின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அதை எய்யும் வழி பூசனையாம். அதை எப்படிச் செய்வது பெறுவது அதனால் ஆன பயன் என்ன என்பது போன்ற வினாக்களுக்கு ஐயம் திரிபற விளக்குவது சிவாகம நூல்களாம். எனவே சிவாகம நூல் பிரமாணங்களைக் கேட்டுணர்ந்து தெரிந்து அதன்படி பூஜைகளைச் செய்யவேண்டும். சிவாகமம் பல சாஸ்திரங்களின் நிலைக்களமாகும். சிவனின் ஐந்து திருமுகங்களிலிருந்து வெளிப்பட்டது.

சிவன் நித்தியம் சரீரம் அநித்தியம் அதில் தங்கியிருக்கின்ற ஆன்மா எந்த நேரத்திலும் வெளிக்கிளம்பிச் செல்லலாம். அந்த ஆன்மா உய்யவேண்டுமானால் அநித்தியமான சரீரத்தைச் சிவன்பால் அடைக்கலம் புகுத்தினாலன்றி மேம்பாடில்லை ஆதலினால் இறைவன் அருள்பெற வேண்டுமானால் அறிவுபெற்று மலம் ஏற்படவொட்டாமல் செய்தலும் பெற்ற அறிவு தோன்றி விளங்கிடவும் அருவுருவாகிய கடவுள் வழிபாட்டைத் தவிர வேறு வழியே இல்லை. இவ் வழிபாடே பூஜை இதனை எவ்வாறு செய்யின் பெறும் பயன் யாது என ஆராயப்புகுந்தவேளை தோன்றியதே இக்கட்டுரை.

சிவாகமமுறை கொண்டு ஆலயங்களில் செய்யப்படும் பூஜை நித்தியம், நைமித்தியம், காம்மியம் என மூன்று வகைப்படும் நித்திய பூஜை உத்தமம், மத்திமம், அதமம் என மூன்று வகையாகப் பிரித்து பின் ஒவ்வான்றிலும் உத்தமம், மத்திமம், அதமம்எனப் பிரிக்கப்பட்டு அதமத்தில் அதமமில்லாம் எட்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உத்தமத்தில் மூன்றாவதாகவுள்ளது. ஆறுகாலப்பூஜை.

**ஆறுகாலப் பூஜைகளுக்கு உரிய நேரம்**

சூரிய உதயத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகை தொடங்கி (4-30 தொடங்கி 6-00 மணி வரை) சூரிய உதயம் வரை செய்ய வேண்டிய பூஜையின் முடிவில் சூரியன் உதயமாகவேண்டும். ஏழரை நாழிகை வரை (6-00 தொடங்கி 9-00 மணிவரை) காலைச்சந்தி.

பன்னிரண்டரை நாழிகை முதல் இருபது நாழிகை வரை (11-00 மணி தொடக்கம் 2-00 மணிவரை) உச்சிக்காலம். சூரியன் அஸ்தமிக்கு முன்பு மூன்றே முக்கால் நாழிகை முதல் (4-30 மணி தொடங்க்கம் 6-00 மணிவரை) செய்யப்படும் பூஜை பிரதோஷகாலம்.

சூரிய அஸ்தமனம் தொடங்கி ஏழரை நாழிகை வரை (6-00 மணி தொடங்கி 9-00 மணிவரை) சாயங்காலப் பூஜை. அதன் பின் மூன்றேமுக்கால் நாழிகை (9-00 தொடங்கி 10-30 மணிவரை) அர்த்தயாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படும் பூஜைகள் யாவும் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற ஐந்து பூதசம்பந்தமாகும். அதாவது சந்தனம், பழம், புஷ்பம், அன்னம் இவையாவும் பிருதுவி உபசாரம், திருமஞ்சனம், பால், தயிர் முதலியவை அப்புவுபசாரம். இரத்தினம், கற்பூரம், அக்கினி உபசாரம். தூபம், சாமரை, விசிறி முதலியவை வாயுவுபசாரம், மணி, தோத்திரம், வாத்தியம் முதலியவை ஆகாசவுபசாரம். சந்தனத்திற்கு கந்தம் என்றும் பெயர் உண்டு. அதிகமான ஆபத்திலிருந்து காப்பது துர்ப்பாக்கியம் பயம் இவைகளைப் போக்குவது என்ற செயலினாலே கந்தம் என்று பெயர் வந்தது. இதுபோல புண்ணியத்தை வளர்ப்பதாலும் பாவக் கூட்டங்களை அழிப்பதாலும் புஷ்பம் என்று பெயர் வந்தது. தூபமானது பாவத்தைக் கொளுத்தி ஆன்மாவை மறைத் திருக்கும் ஆணவ மலசத்தியாகிய அறியாமையை நீக்கும் தத்துவமுடையது. சிற்சத்தியின் வாசமாய் ஞானவிளக்காய் இருப்பது தீபம் எனவே தீபத்தினால் தீமர் மரணம் இல்லாது போகும்.

## அபிஷேக திரவியங்களின் வரிசையும் அளவும் பயனும்

| வரிசை | திரவ்யம் | அளவு | பலம் |
|---|---|---|---|
| 01ஆவது | வாசனைத்தைலம் | ஒரு படி | சுகமளிக்கும் |
| 02ஆவது | மாப்பொடி | ஒரு பலம் | கடனைத் தீர்க்கும் |
| 03ஆவது | நெல்லிமுள்ளி | ஒரு பலம் | அரசன் வசனம் |
| 04ஆவது | மஞ்சள்பொடி | ஒரு பலம் | ரோகத்தைப் போக்கும் |
| 05ஆவது | ஜலதிரவம் | இரண்டு பலம் | |
| 06ஆவது | பஞ்சகவ்யம் | ஒரு மரக்கால் | பாபத்தைப் போக்கும் |
| 07ஆவது | பஞ்சாமிர்தம் | ஒரு மரக்கால் | புஷ்டி அளிக்கும் |
| 08ஆவது | பசுவின் நெய் | அரைப் படி | மோஷ மளிக்கும் |
| 09ஆவது | பசுவின் பால் | ஆறு படி | ஆயுளைக் கொடுக்கும் |
| 10ஆவது | பசுவின் தயிர் | 12 படி | பிரஜாவிருத்தியுண்டாக்கும் |
| 11ஆவது | தேன் | ஒரு ஆழாக்கு | சுகமளிக்கும் |
| 12ஆவது | கரும்பின் சாறு | ஒரு படி | ஆரோக்கியமளிக்கும் |
| 13ஆவது | சர்க்கரை | மூன்று பலம் | |
| 14ஆவது | பழவர்க்கம் | | |
| | வாழைப்பழம் | 25 | பயிரை வளர்க்கும் |
| | மாம்பழம் | 15 | வச்யம் |
| | மாதுளை | 10 | கோபத்தைப் போக்கும் |
| | பலாப்பழம் | 10 | புஷ்டியளிக்கும் |
| 15ஆவது | எலுமிச்சம்பழம் | 25 } 10 } | நேர்மை |
| 16ஆவது | இளநீர் | 25 | போகமளிக்கும் |
| 17ஆவது | அன்னாபிஷேகம் | ஒரு மரக்கால் | சாம்ராஜ்யமளிக்கும் |
| 18ஆவது | சந்தனம் | ஒரு மரக்கால் | லஷ்மியைக் கொடுக்கும் |
| 19ஆவது | கும்பம் | 10 | மோட்ச ப்பரதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 20ஆவது | பத்ராம்பு | ஒரு மரக்கால் | உலகவசம் |
| 21ஆவது | தாராம்பு | ஒரு மரக்கால் | இன்பமளிக்கும் |
| 22ஆவது | சிருங்கதோயம் | ஒரு மரக்கால் | தைரியத்தையளிக்கும் |
| 23ஆவது | ரத்னோதகம் | ஒரு மரக்கால் | லஷ்மீப்ரதம் |
| 24ஆவது | குசோதகம் | ஒரு மரக்கால் | தூய்மையளிக்கும் |
| 25ஆவது | அர்க்யோதயம் | ஒரு மரக்கால் | ஞானமளிக்கும் |
| இதன்பிறகு | சங்கோதகம் | ஒரு மரக்கால் | புண்யப்ரதம் |
| | தீப எண்ணெய் | ஒரு படி | |

**தீபாராதனை**

கீழ்வரும் பதினாறு தீபங்களும் "தீபஷோடசோபசாரம்" என்று அஜிதாகமத்தில் பெயர்பெறும்.

| வரிசை | பொருள் | பயன் |
|---|---|---|
| 1வது | தூபம் | உற்சாகத்தைத் தரும் |
| 2வது | ஏகதீபம் (உருக்களி) | விழிப்பைத் தரும் |
| 3வது | அலங்காரதீபம் (புஷ்பதீபம்) | சாம்ராஜ்யத்தைத் தரும் |
| 4வது | நாகதீபம் | லோகாதிபத்யம் தரும் |
| 5வது | விருஷபதீபம் | அரசையளிக்கும் |
| 6வது | புருஷா மிருகதீபம் | |
| 7வது | சூலதீபம் | வயிற்றுவலி தீரும் |
| 8வது | ஆமைதீபம் | ஐஸ்வர்யத்தைக் கொடுக்கும் |
| 9வது | கஜதீபம் | ஜுலகண்டத்தைத் தடுக்கும் |
| 10வது | சிம்மதீபம் | ஆயுளைக் கொடுக்கும் |
| 11வது | வியாக்கிரதீபம் | விலங்குகளிடத்தில் பயத்தைத் தீர்க்கும் |
| 12வது | கொடிதீபம் | சோபையைத் தரும் |
| 13வது | மயூரத்தீபம் (மயில்) | புத்திரப் பேறு அளிக்கும் |
| 14வது | பஞ்சதட்டுடன் பூர்ண கும்பம் | சாம்ராஜ்யமளிக்கும் |
| 15வது | நக்ஷத்ரதீபம் | பாதுகாப்பு ஆதிபத்தியளிக்கும் (காவல்துறை அதிகாரி) |
| 16வது | மேருதீபம் | எல்லா நாட்டிலும் செல்வாக்களிக்கும் |

**அபிஷேக பலன்**

சிவபிரானுக்கு நெய்யபிஷேகஞ் செய்தலால் ஆயிரங்கோடி வருடங்களில் செய்யப்பெற்ற மகாபாவங்கள் நீங்கும். ஒருமாதம் நெய்யபிஷேகஞ் செய்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தொரு தலைமுறையிலுள்ளாரும் சிவபதத்தையடைவர், கை இயந்திரத்தாலுண்டான தைலத்தை அபிஷேகஞ் செய்தால் அலங்காரஞ் செய்யப்பட்ட அளவில்லாத பசுக்களைத் தானம் செய்த பலன் கிடைக்கும். தயிரபிஷேகஞ் செய்தால் எல்லாப் பாவங்களும் நீங்கி முடிவில் சிவபதங் கிடைக்கும். தேன் அபிஷேகஞ் செய்தால் எல்லாப் பாவங்களும் நீங்கும்.

## பிரதோஷ காலத்தில் வணங்கும் முறை

முதலாவது இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடது பக்கமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து, சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் வலமாகச் சென்று கோமுகியைக் கடவாது சென்ற வழியே திரும்பிவந்து இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்துச் சென்ற வழியே திரும்பி இடபதேவரைத் தரிசியாது கோமுகி வரை சென்று, அங்கு நின்றும் திரும்பி இடபதேவரைத் தரிசியாது இடதுபக்கமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்த திரும்பி வந்து இடபதேவரை தரிசித்தல் வேண்டும். இவ்வாறு செய்யும் பிரதஷிணத்தில் இடபதேவரை நான்கு முறையும், சண்டேசுவரரை மூன்று முறையும், கோமுகியை இரண்டு முறையும் தரிசித்ததாக ஆகின்றது.

## பூஜாத் திரவியத்தின் பயன்

எண்ணை அபிஷேகத்தினால் சௌக்கியம் உண்டாகும். இவ்வாறு பஞ்சாமிருதத்தினால் பரிசுத்தம், நெய்யினால் முக்தி, பாலினால் ஆயுள்விருத்தி, தயிரினால் புத்திரப் பேறு, தேனினால் சுகம், அன்னாபிஷேகத்தால் சாம்ராஜ்யம், சந்தனத்தினால் மோட்சம் கிடைக்கும். வஸ்திரத்தினால் தாரித்திரியம் நீங்கும். புஷ்பமாலை ஐச்வர்யமளிக்கும். நைவேத்தியத்தினால் அரசபதவி கிடைக்கும். தாம் பூலத்தினால் குறைவற்ற பயன் உண்டாகும்.

## திரவிய குறைவினால் ஏற்படும் தீமைகள்

சந்தனம் இல்லையேல் குஷ்டம் உண்டாகும். புஷ்பமில்லையேல் குலமளியும் தீர்த்தமில்லாவிடில் சுகக்குறைவு உண்டாகும். தீபமில்லையேல் தனநாசம் உண்டாகும்.நைவேத்தியமில்லாவிடில் பஞ்சம் உண்டாகும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

## பூசையின் ஐந்தொழில்

அபிஷேகம் படைத்தல் தொழில், நைவேத்யம் காத்தல் தொழில், பலிபோடுதல் சங்காரத் தொழில், தீபம் தீரோபாவத் தொழில், ஹோமம் செய்தல் அனுக்ரஹத் தொழில் ஆகும்.

## பூஜையால் அடையப்படும் நன்மை

யாகம், தவம், தானம், புண்யதீர்த்தாடனம் இவைகளாலுண்டாகும் பலனுக்கு நூறுகோடி பயன் சிவலிங்கர்ச்சனையால் உண்டாகும். மற்றும் பூசகருடைய தவவலிமையாலும் பூசையின் அதிகத்தினால் பிம்பத்தின் லக்ஷணத்தினாலும் சிலையானது தெய்வத் தன்மையடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரா பூரணை விரதம்

சிவயோகி இணையத்திலிருந்து..

இவ்வுலகின் பாவ புண்ணிய பலனை அறிய சிவபெருமான் பார்வதி தேவியின் மூலம் தங்கப்பலகை கொண்டுவரச் செய்து அதில் சித்திரம் அமைத்தார். இதனை கண்டு அதிசயித்த பார்வதி இந்த சித்திரத்தை பேச வைக்க சிவனிடம் வேண்டினார். சிவனும் மந்திர உபதேசம் செய்து அந்த சித்திரத்திற்கு பேசும் சக்தியை கொடுத்து சித்ரபுத்திரன் என்ற பெயரும் வைத்தார். இந்த சித்திரபுத்திரன் (சித்ரகுப்தன்) சித்ரா பவுர்ணமி தினத்தில் அவதரித்தார். அண்ட சராசரங்களிலுள்ள முன்னாள் கணக்குகளையும், பிரம்மா விஸ்ணு முதலானவர்களுடைய பாவ புண்ணிய கணக்குகளையும் தினமும் தமக்குத் தெரிவிக்கும் படி உத்தரவு பிறப்பித்திருந்தார். அதன் படி சித்திரபுத்திரனார். கயிலையிலிருந்து கொண்டு கணக்குகளை எழுதி வந்தார்.

ஒரு சமயம் தேவேந்திரன் தனக்கு மக்கட்பேறு வேண்டுமென்று தருமங்கள் பல செய்து இறைவனை நோக்கி இந்திராணியுடன் தவம் புரிந்தார். சிவபெருமான் காமதேனுவை அழைத்து, இந்திரன் இந்திராணி தவத்தை எடுத்துரைத்த பின்னர், சித்திரபுத்திரரை இந்திரனுக்குப் புத்திரனாகப் பிறந்து, அவன் கவலையை தீர்க்குமாறு அருள் புரிந்தருளினார். அங்ஙனமே சித்திரபுத்தினார் காமதேனுவின் வயிற்றில் உதித்து பாவ புண்ணியங்களைப் பகுத்து வந்தார். இந்த சித்திரபுத்திர நாயனார் கதை சித்ரா பவுர்ணமி அன்று ஆலயங்களில் படிக்கப்பட்டு அன்னதானங்கள் நடைபெற்று வருகின்றன. சித்திரைக் கதை, சித்திரக் கஞ்சி எனவும் அழைக்கப்பட்டது.

பூமியை சுற்றிவரும் சந்திரன் பௌர்ணமி அன்று முழு நிலவாகத் தோன்றி மிகப் பிரகாசமாகக் காட்சிதரும். இந்தப்பௌர்ணமி தினமானது மாதம் ஒருமுறை வந்தாலும் சித்திரை மாதம் வரும் பௌர்ணமிக்கு சில தனிச் சிறப்புக்கள் உள்ளன. மாதம் தோறும் வரும் பௌர்ணமி நாளில் மலைக் கோவில்களுக்குச் சென்று மக்கள் கிரிவலம் வருகின்றனர். எனினும் சித்திரை பௌர்ணமியன்று கிரிவலம்வருதல், கோவில்களிலும் புனிதத்தலங்களிலும் குடும்பத்தாருடன் பொங்கல் வைத்தல் போன்றன சிறப்பானவையாகும்.

மேலும் அன்றைய தினம் புனித நதிகளில் நீராடியும் நமது பாவங்களைப் போக்கிக் கொள்ளலாம். சித்திரா பௌர்ணமியில் சித்திரை நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் சேர்ந்து வருவதால், அன்று கடலில் நீராடுவது மிகவும் சிறப்பானதாகக் கூறப்படுகின்றது. ஏனெனில் அன்றைய தினம் கடலில் நீராடுபவர்களின் பாவங்களை கழித்தும் சிலவற்றை தாமே ஏற்றுக்கொள்ளவும் அங்கே பிரசன்னமாகியுள்ள பித்ருக்கள், மகரிஷிகள், சித்த புருஷர்கள், யோகியர்கள் தயாராக இருப்பார்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரைப் பௌர்ணமியானது, சித்திரகுப்தனாரின் பிறந்த நாளாகும். அவர் நமது பிறப்பு, இறப்பு கணக்குகளைப் பார்த்து வரும் எமதர்மனின் கணக்குப்பிள்ளை ஆவார்.

பூமியில் மனிதர்கள் செய்யும் பாவ, புண்ணியங்களைக் கணக்கெடுத்து அவைகளுக்குத் தகுந்தால் போல் நமக்குரிய சொர்க்க, நகரங்களை முடிவு செய்வதே சித்திர குப்தனின் கடமையாகும். அவரது பிறந்த நாளான சித்திரா பௌர்ணமியன்று பொங்கலிட்டும் கிரிவலம் வந்தும் இறைவனை வழிபடும் போது, சித்திர குப்தனை மனதில் நினைத்து நாங்கள் மலையளவு செய்த பாவங்களைக் கடுகளவாகவும் கடுகளவு செய்த புண்ணியத்தை மலையளவாகவும் எழுதிக்கொள் என வேண்டி வழிபடவேண்டும்.

**சித்ரா பௌர்ணமி விரதமுறை**

சித்ரா பௌர்ணமி அன்று காலையில் பூஜை அறையில் விநாயகர் படத்தை வைத்து அருகில் ஏடும் எழுத்தாணி வைத்து ஒரு பேப்பரில் சித்திரா குப்தன் படியளப்பு என்று எழுதி வைக்க வேண்டும். சர்க்கரைப் பொங்கல் அல்லது வெண் பொங்கலை ஒரு தலை வாழை இலையில் வைத்து படைக்கவேண்டும். படையலுடன் மாங்காய், தேங்காய், பலவகை காய்கறிகள், பருப்புகள், தயிர் கடையும் மத்து, உளி போன்றவற்றையும் வைக்கவேண்டும்.

தொடர்ந்து தேங்காய் உடைத்து தீப ஆராதனை காட்டி வழிபட்டு பொங்கலை எல்லோருக்கும் தானமாகக் கொடுக்க வேண்டும்.

இலங்கையில் குறிப்பாக தமிழர் வாழும் பகுதிகளில் இந்துக்கள் இறந்து போன தமது தாயாரின் ஆத்மாவை நினைத்து அனுஷ்டிக்கும் ஒரு விரதமாக இது அமைந்துள்ளது. இங்கு ஆலயங்களில் விஷேட பூசைகளும் குறிப்பாக அம்மன் கோவில்களிலும் சில பொது இடங்களிலும் ஊர்மக்கள் ஒன்று கூடி அரிசி, தேங்காய் போன்ற பொருட்களைக் கொண்டு சித்திரைக் கஞ்சி சமைத்து அனைவருக்கும் கொடுப்பதோடு சித்திர குப்தனின் கதையைப் படித்தும் இவ் விரதத்தை அனுஷ்டித்து இறந்த தாயாரின் ஆத்மாவைப் பூசிப்பது வழக்கமாகும். இந்த சித்ரகுப்தனுக்கென காஞ்சிபுரத்தில் ஒரு ஆலயமும், திருவெண்ணாமலையில் ஒரு சன்னதியும் உள்ளது.

**சித்திரா பௌர்ணமியின் சிறப்பு**

மிகவும் சிறப்புப் பொருந்திய நாளாக அமைகின்றது. அத்துடன் தாயாரை இழந்தவர்களுக்கு பிதிர் தர்ப்பணம் செய்யும் நாளாகவும், பிரம்மஹத்திதோஷம் பிடித்தவர்கள் தோஷம் நீங்கும் விரதமாகவும், சித்திரா பௌர்ணமியில் பிறந்த சித்திர குப்தர் விரத நாளாகவும் கொண்டாடப்பெறுகின்றது.

சிவாலயங்களிலும், பெருமாள் (விஷ்ணு) கோவில்களிலும் சிறப்பு அபிஷேகங்கள், இறைவழிபாடு, வீதி ஊர்வலங்கள் என்றும் சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுகின்றன. அம்மனுக்குச் சிறப்பாக பொருந்திய இச்சித்திராப் பௌர்ணமி விரத நாளிலேயே எமனின் சபையில் நம் பாவ புண்ணியக்கணக்கை இம்மியும் பிசகாமல் எழுதும் சித்திரகுப்தன் அவதரித்த நாளாகவும் இது கருதப்படுவதால் சித்திர புத்திரனார் விரதமும் அமைகின்றது. அத்துடன் அம்பிகையின் ஆலயங்களில் "சித்திரைக் கஞ்சி" படையல் செய்வதன் மூலம் அம்பிகையின் சீற்றத்தை, கோபத்தை, தணிப்பதனால் அம்பிகையின் சீற்றத்தால் ஏற்படும் அம்மாள் வருத்தம் (கொப்பளிப்பான், சின்னம்மை போன்றவை) ஏற்பாடாது எம்பது ஐதீகம். அதனால் அம்பிகை ஆலயங்களில் குளிர்த்தி பெருவிழாவாக கொண்டாடப் பெறுகின்றது.

இறைவியாகிய அம்பாள், இயற்கையின் சக்தியாக தர்மத்தின் காவலாக, உலக இயக்கத்தின் ஆதாரமாக விளங்குவதாக இந்துக்கள் கொள்கின்றனர். அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நிறுத்த அம்பாள் காலத்திற்குக் காலம் பல்வேறு அவதாரங்களை எடுத்தாகப் புராணங்கள் கூறுகின்றன. பூமாதேவியாக, பொறுமையின் இருப்பிடமாக வீற்றிருக்கும் அன்னை பொறுமை இழந்தால் ஏரிமலையாகக் கிளர்ந்தெழவும், புயலாக, வெள்ளமாக, வரட்சியாக, ஆழிப்பேரலையாக, அதிர்வாக, கொடுநோய்களாக வெளிப்பட்டு தன் சக்தியைக் காட்டி உலகத்தோருக்குப் புத்தியைப் புகட்டும் ஆற்றல் மிக்கவள். தாயாக இருந்து வாழ்வளிக்கும் அம்மனை இந்நன்நாளில் நம்பிக்கையுடன் தொழுது நின்றால் நிச்சயம் வாழ்வில் மலர்ச்சியும், எழுச்சியும் நம்மை நாடி வரும். துன்ப, துயரங்கள் தூர விலகி விடும். மங்களம் பொங்கும் நல்வாழ்வு கிட்டும் என புராணங்கள் கூறுகின்றன.

**பிதிர்களுக்குரிய விரதநாள்**

தந்தையை இழந்தவர்கள் ஆடி அமாவாசை அன்று விரதமிருந்து வழிபாடு செய்வதைப் போன்று தாயாரை இழந்தவர்கள் சித்திரா பௌர்ணமி தினத்திலே விரதத்தை மேற்கொள்கின்றனர். தாயாரை இழந்தவர்கள் இத்தினத்திலே விரதமிருந்து வழிபாடு செய்வதால் இந்நாள் பிதிர்களுக்குரிய விரத நாளாகவும் அமைகின்றது. எம்மைப் பெற்று, சீராட்டி வளர்த்தெடுத்த தாயாரை அவர் மறைந்த பின்பும் நன்றியுடன் நினைவு கூரும் நாளான இந்நாளில் விரதமிருந்து வழிபாடு செய்வதன் மூலம் தாயின் தூய்மையின் பெருமையை மனதிலிருத்தி அவரது ஆன்மா இறைவன் திருவடியில் அமைதி பெற இறைவனைத் தொழும் நாளாகவும் இந்நாள் அமைகின்றது.

அமாவாசையில் சூரியனுடன் 0 டிகிரியில் இணைந்த சந்திரன், தினமும் 12 டிகிரி நகர்ந்து 15 நாளான பௌர்ணமி அன்று 180 ஆம் டிகிரியை அடைகிறது. சூரியனுக்கு சம சப்தமமாகி முழுமையான ஆகர்ஷண சக்தியை (ஈர்ப்பு) வெளிப்படுத்துகிறது. அதனால் அன்று செய்யும் பூஜைகள், வழிபாடுகள் சிறப்பைப் பெறுகின்றன. சூரியனை பித்ருகாரகன் (தந்தையை நிர்ணயிப்பவர்) என்றும், சந்திரனை மாத்ருகாரன் (தாயை நிர்ணயிப்பவர்) என்றும் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது அமாவாசையன்று சூரியனும், சந்திரனும் இணையும் நாளில் மூதாதையர்களுக்கு திதி தர்ப்பணம் செய்கிறோம்.

சூரியனுக்கு அதிதேவதையாக பரமசிவனையும், சந்திரனுக்கு அதிதேவதையாக பார்வதியையும் வைத்திருப்பதும் ஆராய்ச்சிக்கு உகந்தது. அமாவாசை, பௌர்ணமி அன்று முறையே சூரிய சந்திர சங்கமத்தையும், சமசப்தமாக இருப்பதையும் சிவசக்தியின் ஐக்கியம் என்றும் கூறுவது மிகையாகாது. மனித மனதின் மீது அமாவாசை, பௌர்ணமி திதிகளின் தாக்கம், அமாவசை, பௌர்ணமி அன்றுநிகழும் ஆகர்ஷண சக்தியின் வேறுபாடுகள் மனித மன இயல்புகளில் பெரும் மாறுதல்களை உண்டாக்குகின்றன என்பதை மருத்துவம் ஏற்றுக்கொள்கிறது.

தாய் உயிருடன் இல்லாத ஆண்களும், தாரமிழந்த பெண்களும் காலைகளும் எழுந்து புனித (இலங்கையில் கீரிமலை, பாலாவி போன்ற) நீர் நிலைகளுக்குச் சென்று நீராடி இறந்த தாயாரை மனதில் நினைத்து தர்ப்பணம் செய்வர். பின்னர் வீட்டிற்கு வந்து, தாயார் படத்திற்கு உணவு படைத்து பின்னர் குடும்பத்துடன் உணவு உண்பர். பொதுவாக தாயார் படத்திற்கு உணவு படைத்து பின்னர் குடும்பத்துடன் உண்பர். பொதுவாக தாயார் இறந்த முதலாம் ஆண்டு தினம் முடியும் வரை இவ்விரதத்தை அனுசரிக்கக் கூடாது என்பர். பெண்கள் தர்ப்பணம் செய்யாமல் இவ்விரதத்தை அனுசரிப்பர்.

பாவகரியங்களிலிருந்து நீங்கி மேலான புண்ணிய சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் வழிமுறையை விரதங்கள் காட்டுகின்றன. உடலையும் உள்ளத்தையும் சீர் செய்யவும் விரதங்கள் வழி கோலுகின்றன. திருவிளையாடற் புராணத்திலே சித்திரைப் பௌர்ணமி விரதத்தின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. இந்நூலில் இந்திரன் சிவனை வணங்கித் தீவினைகள் நீங்கப் பெற்றான் என்று கூறப்பட்டுள்ளது. மறைந்து விட்ட தாயாரை நினைவிற் கொண்டு விரதமிருந்துடன் வாழ்வில் தவறுகள் தவிர்க்க நல்வழி செய்ய துண்டுதல் செய்யும் சித்திர புத்திரனார் விரதமிருப்பதும் இந்நாளின் சிறப்பை இரட்டிப்பாக்குகின்றது.

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் சித்ரா பௌர்ணமி விழா கொண்டாடப்பட்டாலும், மதுரையில் தான் சித்ரா பௌர்ணமி விழா விசேஷமாக கருதப்படுகின்றது. ஒரு முறை விருத்தராசுரன், விஸ்வரூபன் என்ற இருவரை தேவேந்திரன் கொன்றான். அவர்கள் பிறப்பால் அந்தணர்கள் ஆனதால் இந்திரனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. அதிலிருந்து விடுபட தன் குருவை நாடி உபாயம் கோட்டான்.

குருபகவான் அவனிடம் பூலோகம் சென்று பல்வோறு சிவஸ்தலங்களில் வழிபட்டால் ஓரிடத்தில் உன் தோஷம் நீங்கும் என்று கூறினார். அதன்படி இந்திரன் காசி முதலிய பல ஸ்தலங்களில் வழிபட்டு தெற்கு நோக்கி வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிடத்தில் கடம்ப மரத்தின் கீழ் சென்றவுடன் தன்னைப் பற்றியிருந்த தோஷம் விலகக் கண்டான். இந்திரன் மகிழ்ச்சியடைய அவன் முன் கடம்பமரத்தடியில் சிவபெருமான் திருஆலவாய் சோமசுந்தரர் அவனுக்கு காட்சி கொடுத்தார். இந்திரன் சிவபெருமானுக்கு கோவில் கட்ட நினைத்து தேவலோகத்தில் இருந்து ஒரு விமானம் வரவழைத்தான். இத்தலத்து இறைவனுக்கு இந்திரன் விமானம் அமைத்ததால் அதற்கு இந்திர விமானம் என்றும், விண்ணில் இருந்து வந்ததால் விண்ணிழி விமானம் என்றும் சொல்லப்படுகின்றது. ஆலயம் எடுத்த இந்திரனிடம் ஒவ்வொரு வருடமும் சித்ரா பௌர்ணமி நாளில் என்னை இங்கு வந்து வழிபடுக என்று கட்டளையிட்டார். அதன் படி ஒவ்வொரு வருடமும் சித்ரா பௌர்ணமி நாளில் இந்திரன் இங்கு வந்து வழிபடுகிறான் என்று திருவிளையாடல் புராணம் கூறுகிறது. அதனால் தான் சித்ரா பௌர்ணமி மதுரையில் விஷேமாகக் கருதப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியன்று அம்பிகையை பூஜித்து நல்வாழ்வு பெறலாம். அம்பிகை வழிபாட்டிற்கு பௌர்ணமி தினம் சிறப்பானதாக குறிப்பிடப்படும் புனித நாளாகும். அன்று அம்பாளை வழிபட்டால் குடும்பத்தில் ஒளி உண்டாகும். துன்பங்களாகிய இருள் நீங்கி நன்மை கிட்டும். பௌர்ணமி அன்று உபவாசம் இருந்து வழிபட்டால் சகல சௌபாக்கியங்களும் பெறலாம் என்பது நம்பிக்கை.

## மூர்த்தியலங்காரம்

மூர்த்திகளைத் தீண்டி அலங்கரிக்கும் சிவபுண்ணிய கைங்கரியம் புரிவோர் அந்தந்த மூர்த்திகளுக்குரிய வஸ்திரம், புஷ்பம், மாலை, ஆபரணம் முதலியவற்றால் அலங்கரிக்கக்கடவர். விலக்கப்பட்ட மாலைகளாலும் அசுத்த வஸ்திரங்களாலும் போலிக் கை கால்களாலும் தகாத பிற போலிப்பொருள்களாலும் விபரீதமாய் வனப்புச்செய்வது விபரீதபலனையே தரும்.

மூர்த்திகள் இருத்தல் நிற்றல் சயனித்தல் முதலாக எவ்வாறு அமைந்துள்ளனவோ அந்த ஆகிருதியாகவே அலங்கரித்தல் முறையாம். சாந்தமூர்த்திகளை உக்கிர வடிவாக ஒப்பனை செய்வதும் அது போன்ற பிறவும் நகரபதனத்துக்கே வழிவகுத்த வாறாம். சாஸ்திர விதிப்படி உண்டாக்கப்பட்ட மூர்த்திகளைப் பிரமாணந் தவறுடையும் படி தங்கைவன்மையும் மனமுஞ் சென்றவாறு அலங்கரிப்பது கொடிய அபசாரச் செயலேயாம். இவ்விதமான தூ ராசாரத்தைக் கைக்கொள்ளுவதால் நோய் மிகுதல் வளங்குன்றுதல் முதலிய கெடுதிகள் நாட்டுக்கு உளவாம் என்று சிவவித்தைகள் விரிவாகச் செப்புகின்றன.

**- அச்சுவேலி சிவாகமஞானபானு சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களின் 'மூர்த்தியலங்கார விதி' என்ற நூலிலிருந்து.............**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகி வரும் தமிழர் இசைக்கருவிகள்

## பகுதி 2– நமரி / கௌரிகாளம்

**சரவண பிரபு ராமமூர்த்தி**
புதுச்சேரி இந்தியா,

**அமைப்பு**

நமரி, எக்காளம் போன்ற ஒரு நீண்ட ஊதுகருவி. இரண்டு அல்லது மூன்று பாகங்களை உடைய குழல் வடிவ கருவியான நமரி, யானையின் பிளிறலைப் போன்ற சத்தத்தை எழுப்பும். நமரி கருவி பெரும்பாலும் எக்காளத்தை விட நீளமும் விட்டமும் குறைவாகவும், வாய் பகுதி எக்காளத்தின் வாய் பகுதி போன்று விரிந்து இல்லாமலும் இருக்கின்றது. குறுகியோ அல்லது தட்டையாகவோ இருக்கும். எக்காளத்தின் தம்பி என்று சொல்லலாம் இக்கருவியை. தற்காலங்களில் தூக்கி இசைக்க இலகுவாக 22 கேஜ் (Gauge) கனமுள்ள தகடுகளால் செய்யப்படுகிறது இக்கருவி.

**குறிப்பு**

நமரியை சில ஊர்களில் கௌரிகாளம் என்று அழைக்கிறார்கள். காஞ்சி சங்கர மடத்தில் இரண்டு வெள்ளி கௌரிகாளம் கருவிகள் உள்ளன. இரண்டு பாகங்களாக கழற்றி மாட்டும் வசதியோடு உள்ளது. இரண்டு பாகங்களை சேர்த்தால் சுமார் ஆறடி நீளம் உள்ளது. மடத்து பூசை வேளைகளில் இசைக்கப்படுகிறது. இம்மடத்தின் மடாதிபதிகளின் ஊர்வல நிகழ்வுகளிலும் இசைக்கப்படுகிறது. முன்பு காஞ்சி மடத்தில் கௌரிகாளம் உள்ளிட்ட கருவிகளை இசைக்க உடையார்பாளையம் வன்னிய சமஸ்த்தானத்தில் இருந்து பணியாளர்கள் அனுப்பப்பட்டு வந்ததாக மடத்தின் குறிப்புகள் தெரிவிக்கின்றன. (1944 - ஸ்ரீசந்த்ரமௌளீச்வர சுவாமியின் பூஜா மண்டபம், அம்பாரி, சிம்மாசனம் மற்றும் பல்லக்கைத் தூக்கிவரும் போகிகள், ராணுவ உடுப்புடன் கருப்பு மற்றும் வெள்ளைக் குதிரைகளின் மீதேறி சிப்பாய்கள், தீவட்டிக் காரர்கள், மரச் சாமான்களைத் தம் தலையில் சுமந்தபடி உடன் ஓடி வரும் காலாட்கள், கௌரிகாளை ஊதுகிறவர்கள், திமிரி நாகஸ்வரம் வாசிக்கிறவர்கள், நகரா, தவண்டை, மத்தளம் மற்றும் தவில் வாத்தியங்களை வாசிக்கிறவர்கள், உள்பாரா மற்றும் வெளிப்பாராக்காரர்கள், யானைப்பாகர்கள், மாட்டுவண்டி ஓட்டுபவர்கள், இதர பணி செய்பவர்கள் என்று 200க்கும் மேற்பட்டவர்). சமஸ்த்தானங்கள் மடாதிபதிகளுக்கு அளித்த முக்கியத்துவம் இதிலிருந்து தெரிய வருகின்றது.

காஞ்சி வரதராசப் பெருமாள் கோவிலில் நமரியை கௌரிகாளை என்கிறார்கள். வெள்ளி முலாம் பூசப்பட்டுள்ளது. எக்காளம் போன்று சற்று நீண்டும் வாய் பகுதி சற்று அகன்று தட்டையாகவும் இக்கருவிகள் உள்ளன. சுமார் ஐந்து அடி நீளம் உள்ளது. இதைப் போன்ற அமைப்புடைய கருவி காஞ்சிபுரம் மற்றும் சென்னை பகுதிகளில் மட்டுமே புழக்கத்தில் உள்ளது. காஞ்சி வரதராசப் பெருமாள் கோவிலில் பெரியாழ்வார், ராமானுஜர், வேதாந்த தேசிகன், தாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிகன் மற்றும் மணவாள மாமுனிவன் ஆகியோர் சாற்றுமுறை நிகழ்வுகளில் இரண்டு கௌரிகாளைகள் இசைக்கப்படுவதாக தெரிவிக்கிறார் இக்கோவிலின் வாத்திய மிராசு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள். வீதிவலம் நிகழும்பொழுதும் தொடர்ந்து இசைக்கப்படுகிறது. பழுதடைந்துவிட்ட பழைய கௌரிகாளை கருவிகளுக்கு பதில் புதிய இரண்டு கௌரிகாளைகள் 2020ல் செய்யப்பட்டு வருகின்றது. இக்கருவி தேவைப்படுவோர் திரு கிருஷ்ணமூர்த்தியை அணுகலாம் (919994270705). பாரம்பரியம் மாறாமல் தரமான முறையில் செய்து தருவதாக சொல்கிறார். சென்னை மயிலை ஆதிகேசவ பெருமாள் கோவிலிலும் இக்கருவி பெருவிழா மற்றும் தெப்பம் போன்ற நாட்களில் இசைக்கப்படுகிறது. திருநீர்மலை அரங்கநாதர் கோவிலில் தை மாத ரதசப்தமி நாளில் இசைக்கப்படும். திருப்பெருந்துறையில் இக்கருவி இசைக்கப்படுவது வழக்கொழிந்து விட்டதாகத் தெரிகிறது.

சென்னை கோடம்பாக்கம் அகத்தீச்வரர் கோவில் உள்ளிட்ட சிவாலயங்களில் இக் கருவியை பழைய வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த வினோத்குமார் தம்பிரான் என்பவர் இசைத்து வருகிறார் (919094147848). இவரிடம் இரண்டு கௌரிகாளை கருவிகள் உள்ளன. தமிழ் வழியில் சிவ பூசைகள், காவடி பூசைகள், வீடு குடிபுகுதல், நீத்தார் சடங்குகள், ஆகியவற்றை நிகழ்த்தி வருகிறார். இவரிடம் பூரி, தவண்டை, சேமக்கலம், தவலச்சங்கு, பிரம்ம தாளம் மற்றும் கோனத்தாரை போன்ற பழந்தமிழர் இசைக்கருவிகளும் உள்ளன. கோவில் விழாக்களில் குழுவாக இசைக்கிறார்கள். சென்னை பகுதிகளில் நடைபெறும் மயானக்கொள்ளை நிகழ்வுகளிலும் இக்கருவி இசைக்கப்படும்.

முந்தைய தமிழர் நிலமான மேல் திருப்பதி மற்றும் கீழ் திருப்பதி கோவில்களில் தவண்டை, திருச்சின்னம், சேமக்கலம் ஆகியவற்றுடன் ஒற்றை கௌரிகாளம் தினப்படி பூசை வேளைகளில் இசைக்கப்படுகிறது. கனு பொங்கல் அன்று நடைபெறும் பார்வேட்டை திருவிழாவிலும் இக்கருவிகள் இசைக்கப்படுவதை நாம் காணலாம். வேட்டை திருவிழாவின் வீரியத்தை அதிகரிக்க இக்கருவிகள் துணை செய்கின்றன. தென் தமிழ்நாட்டில் ஆழ்வார் திருநகரி ஆதிநாத பெருமாள் கோவிலிலும் வெள்ளி நமரி இசைக்கருவிகள் உள்ளன.

**புழக்கத்தில் உள்ள இடங்கள்**

- காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோவில்
- திருவேங்கடம் திருவேங்கடமுடையான் கோவில்
- கீழ் திருப்பதி கோவிந்தராஜப் பெருமாள் கோவில்
- மயிலை ஆதிகேசவ பெருமாள் கோவில்
- கோடம்பாக்கம் அகத்தீச்வரர் கோவில்
- சென்னை பாரிமுனை கந்தசாமி கோவில்
- ஆழ்வார் திருநகரி ஆதிநாத பெருமாள் கோவில்
- திருநீர்மலை அரங்கநாதர் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தமிழகத்தில் திருச்சி வட்டாரத்திலும், தஞ்சையை அடுத்துள்ள சுந்தரப்பெருமாள் கோவில் பகுதியில் தொழில் ரீதியாக நமரி இசைப்பவர்கள் இருக்கின்றார்கள். சிவ வாத்திய குழுவினரும் பரவலாக நமரி இசைக்கிறார்கள்.

**காஞ்சிபுரம் சங்கர மடம்**

எக்காளத்துடன் சேர்த்து நாட்டார் சாமிகளின் கோயில் திருவிழாக்களிலும், மற்ற வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் நமரி இசைக்கப்பட்டு வந்தது. திருநாங்கூர் 11 கருட சேவை விழாவில் எக்காளத்துடன் சேர்த்து நமரி இசைக்கப்படுகிறது. இறப்பு வீடுகளிலும் ஒரு சில ஊர்களில் இசைக்கப்படும். வைணவ பிராமண சாதியினர் இக்கருவியைத் தங்களின் நீத்தார் சடங்குகளில் பயன்படுத்துகின்றனர். சில பத்தாண்டுகள் வரை புழக்கத்தில் இருந்து காணாமல் போன சூரிய வளையம், சந்திர வளையம், கொடுகொட்டி, சிறுமுரசு போல் மிக வேகமாக காணாமல் போக இருக்கும் கருவிகளில் இதுவும் ஒன்று. அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும் இக்கருவி விரைவில் அழியும் கருவிகளின் பட்டியலில் வேகமாக முந்தி வருகின்றது. இசைப்பவர்களைக் கண்டால் ஆதரியுங்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணைமிகு காசிவிநாயகர் மகோற்சவம்



காங்கேசன்துறை - யாழ்ப்பாணம் பெருந் தெருவில் மேற்கு நோக்கியதாக உள்ள ஏறத்தாள 300 வருடங்கள் தொன்மை வாய்ந்த காசிப்பிள்ளையார் தெல்லிப்பழை வீணாக்கடவை பதியில் இருந்து அருள் புரிகின்றார். இவ்வாலய மகோற்சவம் சித்திரை சதயத்தை நிறைவாகக் கொண்டு 10 நாட்கள் நடைபெறும். 1973ம் நயினை சிவஸ்ரீ. ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்களால் முதன் முதலாக மகோற்சவம் ஆரம்பிக்கப்பட்டது. அன்னாரால் ஆகம முறைப்படி இறைவன் ஐந்தொழில்களை விளக்கும் முகமாக வடிவமைக்கப்பட்ட மகோற்சவ ஒழுங்கு இன்று வரை தொடர்கின்றது.

இதன் பிரகாரம்

1ம் நாள் - காலை - கொடியேற்றம்
மாலை - யாகாரம்பம்

5ம் நாள்- மாலை - பக்தமுத்திபாவனோற்சவம்

6ம் நாள் - மாலை - வசந்கோற்சவம்

7ம் நாள் - மாலை - தைலாப்பியங்கோற்சவம்

8ம்நாள் - காலை - சங்காபிஷேகம்
மாலை - வேட்டைத்திருவிழா
இரவு - சப்பரம்

9ம் நாள் - காலை - தேர்த்திருவிழா
மாலை - தேரடித் திருவிழா

10 நாள் - காலை - தீர்த்த திருவிழா
மாலை - கொடியிறக்கம் சண்டேஸ்வார் உற்சவம்



இவ் வகை ஒழுங்கில் மகோற்சவம் நிகழ்வது ஒரு சில ஆலயங்களில் மட்டுமே.

இவ் வருடாந்த மகோற்சவம் 27-04-2021ல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 06-05-2021ல் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினத்தில் தீர்த்தம் மற்றும் கொடியிறக்கத்துடன் நிறைவடையும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மாணிப்பாய் மருதடி விநாயகர்

திருமகள் அழுத்தகம். சுன்னாகம். தொ.பே.: 021 224 4510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org